**New Science Academy**
Kannathiddy Jaffna
90 A/L
DAY CLASS
நிகழ்தகவு
FRI — 3-00 - 5-00
PAPER CLASS
SAT, SUN — 7-30 - 9-30
By: பிரேம்நாத்



பக்கங்கள் எட்டு விலை ரூபா:- 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 116 வெள்ளி 01-6-1990 (வைகாசி 18) துல்ஹஃதா 7



**New Science Academy**
B.M C. முன்பாக
யாழ்ப்பாணம்
90 A/L
PAPER CLASS
Organic — 12-30
In - Organic — 130
TUE. THU. FRI
By சண்


## சந்திப்பு: இன்று காலை பிரேமா - ஹமீத்துடன் மாலையில் முப்படைத் தளபதிகளுடன்



தமிழீழ விடுதலைப்புலிகளின் தூதுக்குழுவினர் இன்று காலை ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவைச் சந்தித்து தமது கோரிக்கைகள் பற்றிய நிலையினை விரிவாகவும், ஆணித்தரமாகவும் எடுத்துரைக்கவுள்ளனர்.

விடுதலைப்புலிகள் தூதுக்குழுவில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு கோ. மகேந்திரராஜா (மாத்தயா) திரு. யோகரத்தினம் யோகி, அரசியல்ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், திருமதி பாலசிங்கம் மற்றும் விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியின் முக்கியஸ்தர் ஜெயா ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது நீதியமைச்சர் ஜனாப் ஏ.ஸி.எஸ் ஹமீத்தும் பிரசன்னமாக இருப்பார். மாகாணசபைக் கலைப்பு, ஆறாவது ஷரத்து நீக்கம் ஆகிய இரு கோரிக்கைகளும் தூதுக் குழுவினால் திண்ணிய நிலைப்பாட்டுடன் முன்வைக்கப்படும்.

இச் சந்திப்பின் பின் பெரும்பாலும் மாலை தூதுக்குழுவினர் முப்படைகளின் தளபதிகளையும் சந்திப்பர்.

வடக்கு, கிழக்கு பாதுகாப்பு நிலைமை பற்றி அங்கு ஆராயப்படும்.

கொழும்புப் பேச்சுவார்த்தகளின் பின் தூதுக்குழுவினர் அமைச்சர் ஹமீத் சகிதம் கிழக்கு மாகாணத்திற்குப் பயணமாவர். அங்கு பிரதேச வாரியாக நிலைமை அலசி ஆராயப்படும்.



★ வடக்கு, கிழக்கு நிலை புற்றுநோய் போன்றது ★ நம்பிக்கையைப் படிப்படியாகவே வளர்க்க வேண்டும் ★ போர் மூளுமளவிற்கு மூடராகச் செயற்படமாட்டோம்

# இரத்தக் களரியைத் தவிர்க்க சகல வழிகளிலும் முழு முயற்சி

## புலிகளுடனான பேச்சில் முன்னேற்றம் நேற்று அமைச்சர் ரஞ்சன் அறிவிப்பு

"வடக்கு,கிழக்கு நிலைமை ஓர் புற்று நோயைப் போன்றது. மக்கள் மத்தியில் படிப்படியாகவே நம்பிக்கையை வளர்க்க வேண்டும்." என்று நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தின் பின் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் பெருந் தோட்டத்தொழிற்றுறை ,பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு.ரஞ்சன் விஜேரத்ன கூறினார்.

"இரத்தக்களரியைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் தனது சக்திக்குட்பட்ட சகல வழிகளினாலும் முயன்று வருகின்றது" என்றும் தெரிவித்த அவர் விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைகளில் திருப்திகரமான முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது.'' என்றும் சொன்னார்.

''நாட்டின் வடக்கு,கிழக்கு நிலைமையைப் படிப்படியாகச் சீர்திருத்த வேண்டும்.'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது பற்றி அவரது கருத்தைக் கேட்டபோது தன்னால் முடிவாக எதனையும் கூறமுடியாது என்றார்.

விடுதலைப்புலிகள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையிழந்து வருவதாகவும் அவர்கள் யுத்தம் ஒன்றுக்கு தயாராகி வருவதாகவும் நிலவும் அபிப்பிராயம் தொடர்பாகப் பத்திரிகையாளர்கள் அமைச்சரிடம் பல வினாக்களை விடுத்ததோடு பல கருத்துக்களையும் வெளியிட்டனர்.

இவற்றுக்கு பதிலளித்த அமைச்சர் பாதகமான நடவடிக்கை மேற்கொள்ள அரசாங்கத்தை எவரும் தூண்ட முடியாது என்று சொன்னார்.

''ஒரு குழுவைத் தாக்குவதற்கு அரசாங்கம் மற்றும் ஒரு குழுவைப் பயன் படுத்தவில்லை சொந்தக் காலில் நிற்கும் ஆற்றல் அரசாங்கத்

—08ஆம் பக்கம் பார்க்க

## மந்திரி லலித்துக்கு தமிழ் 'டிக்க,டிக்க தண்ணவா'

''ஆங்கிலமும்,சிங்களமும் தெரிந்த நான் யாழ்ப்பாணத்து நல்ல தமிழ் பேசாவிட்டாலும் மலையக முஸ்லிம் மக்கள் பேசுவது போன்ற தமிழைப் பேசிச் சமாளிப்பேன்'' என்று கல்வி 'உயர் கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி கூறினார். கம்பளையில் மத்திய மாகாண பாடசாலை அதிபர்கள் மத்தியிலே பேசுகையில், மூன்று மொழிகளையும் இலங்கையர் தெரிந்து

— 8 ஆம் பக்கம் பார்க்க

மேஜர் முரளி நினைவுக் கேடய

## புதிர்ப் போட்டிகள் நாளை 6 கோட்டங்களில் நிகழும்

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கமும், நிதர்சனம் தொலைக்காட்சி நிறுவனமும் இணைந்து மேஜர் முரளி நினைவுக்கேடய புதிர்ப் போட்டியை நாளை சனிக்கிழமை காலை யாழ் மாவட்டத்தின் ஆறு கோட்டங்களில் நடாத்தவுள்ளன.

யாழ் கோட்டப் போட்டிகள் யாழ் மத்திய கல்லூரியிலும், மருதனாமடம் கோட்டப் போட்டிகள் மருதனாம

— 8ம் பக்கம் பார்க்க

'தொண்டா' சொல்கிறார்:தாயகம் மீண்டோரில்

## 20 வீதமானோருக்கே புனர்வாழ்வு ஏனையோர் நடுத்தெருவில்

ஏற்கனவே தாயகம் திரும்பியவர்களின் 20வீதமானோரே புனர் வாழ்வளிக்கப்பட்டுள்ளனர்.ஏனையோர் நடு வீதிகளி அலைகின்றனர்.''

உல்லாசப் பயணத்துறை கிராமியக் கைத்றொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் இவ்வாறு தெரிவித்தார்.

மாற்றலாகிச் செல்லும் இந்தியத் தூதுவர் திரு. எல். மெஹ்கோத்ராவுக்கு கொழும்பு தாஜ்ஹொட்டலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அளித்த பிரியாவிடை வைபவத்திலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

''வன்செயல்கள் காரணமாக பெருந்தொகையான

— 08ஆம் பக்கம் பார்க்க

ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்துடன்

## வலிந்து சென்று அரசாங்கம் பேசவில்லை என்கிறார் ரஞ்சன்

''ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்துடன் அவ்வியக்கத்தின் கோரிக்கையின் பேரிலேயே அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தியது.

அரசாங்கம் ஒரு போதும் அவ்வியக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வரவில்லை'' என்று நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டின்போது திரு. ரஞ்சன் விஜ

— 8ம் பக்கம் பார்க்க

# பிரதேச வேறுபாடு கலைஞர் எழுத்தாளரிடம் கூடாது

## திருமலைக் கூட்டத்தில் வலியுறுத்தல்

''எழுத்தாளர், கலைஞர் மத்தியில் பிரதேச வேறுபாடு எழக் கூடாது'' திருகோணமலை கலை, இயக்கிய வட்ட கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

திருகோணமலை பொது நூலக மண்டபத்தில் இவ்வட்ட அமைப்பின் அங்குரார்ப்பணக் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது.

டாக்டர் மா. வசந்தமாலா அறிமுக உரை நிகழ்த்துகையில் கூறியதாவது ''தமிழ் எழுத்தாளர்கள், கலைஞர்கள் மத்தியில் பிரதேச வேறுபாடு தோன்றுவது அவர்களது வளர்ச்சிக்கு ஆரோக்கியமானதல்ல.

எழுத்தாளர்களும்,கலைஞர்களும் எல்லாப் பிரதேசத்திற்கும் பொது வானவர்கள் தெளிந்த சிந்தனையாளர்கள்.

எத்தகைய காலகட்டத்திலும் அவர்கள் பிரதேச வேறுபாட்டை மறந்து செயற்பட்டால் தான் கலைக்கும், இலக்கியத்திற்கும்அவர்களால் சிறந்த பணியாற்ற முடியும்.

திரு. புரட்சிபாலன் பேசுகையில், பழங்கதைகள் பேசி காலவிரயத்தை ஏற்படுத்தாமல் துரிதமாக முன்னேற வேண்டிய நிலைலியிருக்கும் எமக்கு இக்கலை இலக்கிய வட்ட அமைப்பு ஒரு நல்ல துணையாக அமைய வேண்டும் ''என்றார்,

'நாட்டில் ஏற்பட்ட சீர்குலைவினால் இலக்கிய வளர்ச்சியில் நாம் மிகவும் பின்தங்க நேர்ந்து விட்டது' என்பதையும் அவர் தனது உரையின் போது குறிப்பிட்டார்.

பண்டிதர். சி. வைரமுத்துவும் பேசினார்.

# தொண்டமானாறு- உடுப்பிட்டி வீதி திருத்தம் எப்போது?

தொண்டமானாறு— உடுப்பிட்டி வீதி திருத்தப்பட வேண்டியதன் அவசியத்தை தொண்டமானாறு கலையரசி சன சமூக நிலையம் வற்புறுத்தியுள்ளது.

இது பற்றி மேலிடத்துக்கு முறையிட்டும் பலன் ஏதும் விளையவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இனி மேலாவது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற் கொள்வார்களா? என்று கேட்கப்படுகின்றது.

## மல்லாகம் மகாவித்தியாலயம்

# எட்டு லட்சம் ரூபா செலவில் புதிய ஆய்வு கூடம் அமைகிறது

(கீரிமலை)

மல்லாகம் மகாவித்தியாலயத்தில் எட்டு இலட்சம் ரூபா செலவில் புதிய ஆய்வு கூடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

இம்மாடிக்கட்டிடத்தின் வேலைகள் பெரும்பாலும் பூர்த்தியாகும் நிலையில் உள்ளன.

விரைவில் இக்கட்டிடம் திறந்து வைக்கப்படலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.

# தீவுப்பகுதியில மணல் ஏற்றதடை குளத்துமணல் ஏற்ற அனுமதி

தீவுப்பகுதிகளில் மணல் மற்றும் களிமணல்கள் ஏற்ற தடை செய்யப்பட்டிருந்த போது குளங்களில் உள்ள மண்ணை எடுப்பதற்கு தடை இல்லை என தெரிவிக்கப்படுகின்றது

குளங்களில் மண் எடுக்க விரும்புவோர் அவ்வப்பகுதி சிற்றூரவை தலைவரிடமும் 'விடுதலைப் புளிகளிடமும் தொடர்பு கொண்டு மண்ணை எடுக்க முடியும். குளங்கள் ஆழமாக்கப்படல் வேண்டும் என்னும் குறிக்கோளை முன்னிட்டே இது செயல்படுத்தப் படுகிறது (24)

# பயிலுநர் ஆசிரியர் சங்கம்

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பயிலுநர் ஆசிரியர்கள். பயிலுநர் ஆசிரியர் சங்கம் ஒன்றினை அமைத்துள்ளார்கள்.

இதன்உறுப்பினர்களின் விபரம் வருமாறு. தலைவர்: திரு. ம. ஞானசம்பந்தர், உபதலைவர்: செல்வி ,சி. சிவகௌரி செயலாளர்: திரு. சி, தயாபரன் உபசெயலாளர்: செல்வி. ந. மஞ்சுளா பொருளாளர்: செல்வி.அ. அருட்செல்வியும் கொத்தணி ரீதியாக தெரி செய்யப்பட்டுள்ளனர்,

# ஆசிரியர்களிடம் வேண்டுகோள்

இருநேரப் பாடசாலைகளாக இயங்கும் காலத்தில் வெள்ளிக்கிழமைகளில் மாணவர்களின் ஆலய வழிபாட்டிற்குதவும் முகமாகப் பாடசாலைகளை மூன்று மணிக்கு மூட வேண்டுமென்றும், வெள்ளிக்கிழமைகளில் ஆசிரியர்கள் இந்துசமய கலாசாரத்திற்கு ஏற்ப தேசிய உடையில் பாடசாலைக்குச் சமூகமளிக்க வேண்டும் என்றும் யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை வேண்டுகோள் விடுத்து உள்ளது. (36)

# நடவடிக்கை

நெல்சந்தைப்படுத்தும் சபை மூதூர்க் களஞ்சியத்தில் சில்லறையிலும் நெல் கொள்வனவு செய்ய திருகோணமலை பிராந்திய முகாமையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதனால் தினமும் விவசாயிகள் குறைந்தளவு நெல்லை இங்கு கொடுத்து உடன் பணம் பெறக்கூடியதாகவுள்ளது.

# ரூ.30 ஆயிரம் செலவில் பாடசாலை மதில்

(சங்கானை)

மாதகல் நுணசை வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச்சபை மேற்கொண்ட முயற்சியினால் வித்தியாலயத்தைச் சுற்றி மதில் சுமார் 30 ஆயிரம் ரூபா செலவில் கட்டப்பட்டு வருகின்றது.

முன்பக்க வாசலுக்கான இரும்புக்கேற் ஒன்றை மாதகல் மேற்கைச் சேர்ந்த திரு கே. வைத்திலிங்கம் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (13)

## சண்டிலிப்பாய் உ.அ.அதிபர் பிரிவு

# சனசமூக நிலைய அபிவிருத்தி ஆராய கருத்தரங்கு நிகழும்

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாஜத்தினால் இப்பிரிவிலுள்ள சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி தொடர்பாக ஆராயும் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 2-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் இளவாலையிலுள்ள முள்ளானை கலைவாணி சனசமூக நிலையத்தில் நடாத்தப்படவுள்ளது.

சமாஜத்தலைவர் திரு.வ. செகராஜசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் யாழ் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா, சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவார்கள்.

ஒவ்வொரு சனசமூக நிலையத்திலிருந்தும் இரு பிரதிநிதிகளை இக் கருத்தரங்கிற்கு தவறாது அனுப்பி வைக்குமாறு வேண்டுகோள் விடுக்கக் கப்பட்டுள்ளது.(13)

# உணவு விலை அதிகரிப்பினால் ஊட்டச் சக்திகுறைவு நோய்

உணவுப் பொருட்களின் விலை ஏற்றம், எரிசக்தி, உடை, இருப்பிட வசதி போன்றவைகளின் செலவுகள் அதிகரித்துள்ளமையினால் கிராம மக்கள் 15சதவீதத்தாலும்,நகர்ப்புறப் மக்கள் எட்டு சதவீதத்தாலும் உணவுக்காக செலவிட்டு வரும் தொகை வீழ்ச்சி கண்டுள்ளது.

இதனால் குறைந்த வருமாணம் பெற்றுவரும் மக்களிடையே ஊட்டச் சக்தி குறைவு ஏற்பட்டுள்ளது. தோட்டப்பகுதி மக்களிடையே உணவுக்காக செலவிடும் சக்தி 56-32சதவீதமாக வீழ்ச்சி அடைநதுள்ளது குறிப்பிடத்தக்கது.

இலங்கையர் தமது வருமானத்தில் பாதிக்கும் மேற்பட்ட தொகையை குடும்பக் செலவுகளுக்கு. முக்கியமாக உணவுக்கு செலவிட்டு வருகின்றன. இதே சமயம் நாடளாவிய மட்டத்தில் மக்கள் உணவிற்காக செலவிட்டு வரும் தொகை 11 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது.

புள்ளி விபர திணைக்களம் வெளியிட்டுள்ள கணிப்பீடு ஒன்றில் மேற்படி விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## காஸ் அடுப்புகளைப் பாவிக்கும்

# 3 இலட்சம் குடும்பங்களால் 10 கோடிரூபா வருடாந்த விரயம்

சமையல் வேலைக்காக காஸ் அடுப்புகளைப் பாவிக்கும் 3 இலட்சம் குடும்பங்களால் வருடாந்தம் 10 கோடிரூபா பெறுமதியான வாயு விரயமாகின்றதென எரிசக்தி நிபுணபகள் தெரிவித்துள்ளனர்.

மஞ்சள் சுவாலையுடன் நெருப்பை எரிய விடுவதாலும், நீண்ட காலமாக காஸ் அடுப்புக்களை துப்பரவு செய்யாமல் தொடர்ச்சியாக எரிய வைப்பதாலும் காஸ் கூடுதலாக விரயமாகின்றதுஎனவும் அவர்களால் சுட்டிக் காட்டர் பட்டுள்ளது.

# முதலிடம்

(கோப்பாய்)

கிளிநொச்சி மாவட்டத்துக் கிகையோன தமிழ்த்தின விழாவை யொட்டி நடைபெற்ற தனி நடனப் போட்டியில் இயக்கட்சி அரசினர் தமிழ் வித்தியபலய மாணவி செல்வி த. துஷயந்தினி முதலபமிடத்தைப் பெற்றுக் கொண்டார்.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## கேள்விப் பத்திர அறிவித்தல்

### 1000 வெள்ளிப் பதக்கம் வழங்கல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு''யாழ்ப்பாணப் பல்கலைக்கழக'' இலட்சனை பொறிக்கப்பட்ட வெள்ளியாலான 70×55 செ. மி அளவுடைய நீள் வட்ட வடிவான 1000 பதக்கங்கள் வழங்குவதற்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. இலட்சினை மாதிரிகளை அலுவலக நேரத்தில் பல்கலைக்கழக நிதிக்கிளையில் பார்வையிடலாம்.

கேள்விகள் சகல விபரங்களையும் கொண்டதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பெயருக்கு எழுதப்பட்ட மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் சுட்டணமாக ரூபா. 150/- காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கட்டணம் இன்றி அனுப்பப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

கேள்விகளுக்கு விண்ணப்பிப்போர் கேள்விப்பத்திர தபால் உறையில் இடது பக்க மேல்மூலையில் 'வெள்ளிப் பதக்கம் வழங்கலுக்கான கேள்விகள்' எனக் குறிக்கப்பட்டு நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு 15. 6. 90 காலை 10 மணிக்கு முன்னதாகக் கிடைக்கும்படியாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கேள்விகள் 15.6.90 முற்பகல் 10. 30 மணிக்குத் திறக்கப்படும்.

பதிவாளர்
06001






## LONDON EXAMS

### NOV / DEC - 1990

| | | Commencement Date |
|---|---|---|
| C. I. M. A. | (Stage I) | 2- 6- 90 |
| I. D. P. M | (part I) | 2- 6- 90 |
| A. A. T. (Sri Lanka) | (Stage I) | 2- 6- 90 |
| I. A. B. | (Foundation) | 2- 6- 90 |
| | (Intermediate) | 9- 6- 90 |
| | (Final) | 16- 6- 90 |
| Computer - BASIC | | 7- 6- 90 |

Lotus 1-2-3, d Base III + ,Word Processing Short-hand & Typing வகுப்புகள் நடைபெறுகின்றன

For details

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

(C. I. M. A யினால் அங்கீகரிக்கப்பட்டது)

16, 3rd Cross Street

JAFFNA

06002

# சில லட்சம் இங்கு வந்தால் பல உயிர்கள் காக்கப்படும்

திறந்து வைக்கப்பட்ட மறுநாளே மூடு விழாக்கண்ட 'பெருமைக்' குரியது நமது தெல்லிப்பழை புற்று நோய் வைத்தியசாலை.

அன்று தொட்டு இந்த வைத்தியசாலையை மீண்டும் பூரணமாக இயங்கச் செய்ய எடுக்கப்பட்ட எந்த முயற்சியும் இதுவரை வெற்றியளிக்க வில்லை.

தெல்லிப்பழைப் புற்றுநோய் வைத்தியசாலையின் வரலாறு கொஞ்சமாவது தெரிந்தவர்களுக்கு இது பற்றிய உண்மைகள் புரியும்.

காலத்திற்குக் காலம் ஆட்சிக்கு வந்த சகல அரசாங்கங்களும் இதனை ஒரு அரசியல் நடவடிக்கையாகக் கருதினவேயன்றி மனித உயிருடன் சம்பந்தப்பட்டதாக நினைத்துச் செயற்படவில்லை என்பது அப்பட்டமான உண்மை. சுகாதார அமைச்சர்களாக இருந்தவர்களும் உடனுக்குடன் வாக்குறுதி அளித்து வந்துள்ளனராயினும் அவற்றைச் செயற்படுத்துவதில் அக்கறை காட்டவில்லை.

புற்றுநோய் வைத்தியசாலைக்கு இருக்க வேண்டிய மிக முக்கிய வைத்திய சாதனம் 'கோபோல்ட் யூனிற்' எனப்படும் இயந்திரம்.

முன்னர் ஒருதடவை தெல்லிப்பழைப் புற்றுநோய் வைத்தியசாலைக்கென்று ஒரு 'கோபோல்ட் யூனிற்' வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்டது.

ஆனால், 'கைக் கெட்டியும் வாய்க் கெட்டாதது' போல அது கைமாறி விட்டது.

## இதயநாதம்

வெள்ளிக்கிழமை 01—06—1990

### நலவாக்கு

*சென்றது மீளாது. சென்றதைச் சிந்தித்து உழலாதே! இன்று புதிதாய்ப் பிறந்ததாக எண்ணிக் கொள்! மனமே! ஒன்றையே பற்றிக்கொண்டு ஏன் ஊசலாடுகிறாய்? பேயாக ஏன் உழலுகிறாய்?*

—பாரதியார்

ஸ்ரான்லிவிதி யாழ்ப்பாணம்

அப்போது சுகாதார அமைச்சராக இருந்தவர் கண்டித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.எல்.சேனநாயக்கா.

அந்த இயந்திரத்தைக் கண்டிப் போதனா வைத்தியசாலைக்கு அவர் வழங்கி விட்டதால் தெல்லிப்பழை வைத்தியசாலை அந்த இயந்திரம் இன்றி இன்னமும் இயங்க முடியாத நிலையிலுள்ளது.

இதேபோன்று தெல்லிப்பழையிலிருந்த கதிரியக்க இயந்திரத்தின் முக்கிய பாகங்களையும் சுகாதார அமைச்சு கழற்றி எடுத்துள்ளது.

இதனால் தெல்லிப்பழைப் புற்று நோயாளர் வைத்தியசாலையை உடனடியாக இயங்கச் செய்ய முடியாத அவலநிலை ஒன்று உருவாகியுள்ளது

இலங்கையிலுள்ள புற்று நோயாளர்களில் கணிசமான தொகையினர் வட பகுதியைச் சேர்ந்தவர்கள்.

கடந்த ஐந்தாண்டுகளில் சுகாதார அமைச்சினால் சேகரிக்கப்பட்ட புள்ளி விபரங்களின்படி ஏறத்தாழ ஐம்பது வீதத்திற்கும் அதிகமான புற்று நோயாளர்கள் வடக்கிலிருந்து மகரகமவுக்குச் சிகிச்சைக்குச் சென்றுள்ளனர்.

வடபகுதியைச் சேர்ந்த புற்றுநோயாளர் ஒருவர் மகரகமவுக்குச் சிகிச்சை பெறச் செல்வதிலுள்ள கஷ்டங்களைச் சம்பந்தப்பட்டவர்கள் அறியாதிருக்க முடியாது.

போக்குவரத்துப் பிரச்சினை, நோயாளரைத் தங்கவைக்கும் பிரச்சினை, மொழிப் பிரச்சினை போன்றவற்றை இலகுவில் தீர்த்துவிடமுடியாது.

எனவே இப் பிரச்சினையிலிருந்து விடுபட ஓரேவழி தெல்லிப்பழைப் புற்றுநோய் வைத்தியசாலையை உடனே செயற்பட வைப்பதுதான்.

பலகோடிக் கணக்கான ரூபா பெறுமதியான பல திட்டங்களை அமுல் செய்யப்போவதாக அரசாங்கம் தினசரி அறிவிக்கிறது.

தெல்லிப்பழைக்கு சில லட்சம் ரூபா கிடைக்குமானால் பல உயிர்கள் காப்பாற்றப்படும். பல நூற்றுக் கணக்கான புற்று நோயாளர்கள் சிரமமின்றிச் சிகிச்சை பெறமுடியும்.

மனமிருந்தால் நிச்சயம் இடமுண்டு. சம்பந்தப்பட்டவர்கள் யாராவது இந்த விடயத்தில் கரிசனை எடுப்பார்களா?

# லேசர் ஒளி லேசுப்பட்ட ஒளியல்ல!

# உலக 'சகலகலாவல்லவன்' லேசர்

**உலக வல்லரசு நாடுகள் அணு ஆயுதங்களைச் செய்வதில் அதிக போட்டியைக் கொண்டுள்ளன. தங்கள் பகை நாடுகளை எந்தக் கணமும் தாக்க இவை ஏவுகணைகளைத் தயாராக வைத்துள்ளன. ஏதாவது ஒரு நாடு ஏவுகணையை ஏவினால் உலகத்தின் கதி என்ன ஆவது? இந்த ஏவுகணையை வழியிலேயே தடுத்து எதிர்த்து பொசுக்கிச் செயலற்றதாக்கிவிடும் வல்லமை இந்த லேசர் ஒளிக்கற்றை ஒன்றுக்கு மட்டுமே உண்டு.**

அமெரிக்காவில் பிரபல மருத்துவமனை ஒன்றில் மிகவும் சிக்கலான ஆபரேஷன். நோயாளியின் மண்டையோட்டுக்குள், மூளைப் பகுதியில் ஒரு கட்டி.

நோயாளி பல ஆண்டுகளாக நரக வேதனை அனுபவித்து வருகிறார். மண்டையோட்டைப் பிரித்துக் கட்டியை அகற்ற வேண்டும். சிக்கலான ஆபத்தான ஆபரேஷன்.

குண்டூசியின் கொண்டையளவே உள்ள மிக நுண்ணிய ஒளிக்கற்றை ஒன்றைச் செலுத்தி, அந்தப் பொல்லாத கட்டியைச் சுட்டெரித்து வெட்டி அகற்றுகிறார்கள். மூளைக்கு எந்தச் சேதமும் ஏற்படவில்லை. அவர்கள் பயன்படுத்தியது லேசர் ஒளிக்கற்றையை!

இமயமலை மிக மிக மெதுவாக, மனிதனால் உணர முடியாத அளவில் அசைந்து கொண்டிருக்கிறது என்ற தகவலைப் புவியியல் நிபுணர்கள் கூறியபோது அதை அப்படியே ஏற்க எல்லோரும் தயங்கினர்.

தங்கள் கண்டு பிடிப்பைப் பரிசோதனை வாயிலாக அவர்கள் நிரூபித்துக் காட்டியபோது யாராலும் மறுக்க முடியவில்லை. இந்தப் பரிசோதனைக்கு உதவியது லேசர் ஒளிக்கற்றையே.

உலகப் புகழ்பெற்ற விலை மதிப்பே இல்லாத ஒரு வைரம் ஒருவருக்கும் தெரியாமல் மாற்றப்பட்டு, அந்த இடத்தில் போலி வைரம் வைக்கப்பட்டு விட்டது என்று ஒரே வதந்தி. இதை எப்படிக்கண்டு பிடிப்பது?

பல பரிசோதனைகளுக்கு அந்த வைரத்தை உட்படுத்த வேண்டும். அதன் காரணமாகவேகூட அந்த வைரம் தன் தன்மையை இழந்து விடலாம். இழப்பு எதுவுமே இல்லாமல் இந்தச் சிக்கலான பரிசோதனையை எளிதில் நிறைவேற்றப் பெரிதும் உதவியாய் இருந்தது அதே லேசர் ஒளிக்கற்றைதான்!

வல்லரசு நாடுகளிடையே அணு ஆயுதங்களைச் செய்வதில் போட்டி. தங்கள் பகை நாடுகளை எந்தக் கணமும் தாக்க இவை ஏவுகணைகளைத் தயாராக வைத்துள்ளன.

ஏதாவது ஒரு நாடு ஏவுகணையை ஏவினால் உலகத்தின் கதி என்ன ஆவது? இந்த ஏவுகணையை வழியிலேயே தடுத்து, எதிர்த்து, பொசுக்கிச் செயலற்றதாக்கி விடும் வல்லமை இந்த லேசர் ஒளிக்கற்றைக்கு உண்டு!

மருத்துவத் துறையில், புவியியல் துறையில், பௌதிகத் துறையில், அணுஇயல் துறையில் என்று பல துறைகளிலும் தனது தனித்தன்மையைக் காட்டித் தன்னிகரில்லாமல் விளங்கும் இந்த லேசர் ஒளிக்கற்றை எப்படி உருவாகப்படுகிறது? சாதாரண ஒளிக்கற்றைக்கும் இதற்கும் என்ன வேறுபாடு?

எல்லா அணுக்களிலும் நியூட்ரான்களும் புரோட்டன்களும் மறைந்துள்ளன. அணுக்களை மின்சாரத்தால் கிளர்ச்சியடைய வைத்தால் இவை ஒளி அணுக்களை (போட்டோன்ஸ்) வெளியிடுகின்றன.

சூழ்நிலை மாற்றங்களை ஏற்று, இவை மற்ற அணுக்களுடன் மோதி, கண்ணாடியில் எதிரொலித்து, பெருகி அழுத்தச் செறிவு பெற்று ஒளிக்கதிர்களாக(ஒளிக்கற்றைகளாக) ஊடுருவி வெளியே வரும். இந்த ஒளிக்கற்றையே லேசர்.

எதையும் சாதிக்கவல்ல இந்த லேசர் ஒளிக்கற்றையின் நீள அளவும், நிறமும், குணமும் இந்த லேசர் தயாரிக்கும் காலத்தில் பயன்படுத்தப்படும் (லேசர் மீடியா) பொருள்களைப் பொறுத்தது ஆகும்.

வாயு லேசருக்கு ஹீலியம், நியான், ஆர்க்கான், க்ருப்டான், கார்பன்—டை—ஆக்ஸைடும், திடப்பொருள் லேசருக்கு 'டை' யும்திரவ நிலை லேசருக்கு மாணிக்கமும் (ரூபியாக்கும்) பயன்படுத்துகின்றன.

சாதாரண ஒளிக்கற்றை ஒரே சீராக இருக்காது; நெடுந் தொலைவு எட்டாமலேயே விரிவடைந்து கலைந்து விடும். ஆனால், லேசர் ஒளிக்கற்றை எவ்வளவு தொலைவு சென்றாலும் எளிதில் களைவதில்லை. எளிதில் கரைவதில்லை; எளிதில் விரிவடைவதில்லை.

சந்திரனில் உள்ள ஒரு பொருளை, லேசர் ஒளிக்கற்றையால் காண முடியும். இப்படி 1962 ஆம் ஆண்டு மே 9-ம் நாளன்று செலுத்தப்பட்ட லேசர் ஒளி, சந்திரனில் பிரதிபலித்துப் புதிய வரலாற்றைத் தோற்றுவித்துள்ளது.

இந்தலேசர் ஒளிக்கற்றைக்கு முன்னோடி என்ன? அணுக்களால் ஏற்கப்படும் ஒளியைத் தூண்டி சக்தி செறிந்த ஒளிக்கதிர்களாக மீண்டும் வெளியிட வைக்கலாம் என்ற சாத்தியக்கூறை 1917ல் ஐன்ஸ்டைன் வெளியிட்டார். 1928ல் கண்டுபிடிக்கப்பட்டு, 1930ல் நோபல் பரிசு பெற்ற ராமன் ஒளிச் சிதைவும் ஒளிக்கதிர் விளைவில் ஆராய்ச்சியாளரை முடுக்கி விட ஒரு காரணமாக அமைந்தது.

சார்லஸ் எச். டவுன்ஸ் என்ற விஞ்ஞானி குறைந்த ஒளிச்செறிவுள்ள மைக்ரோ கதிர்களைப் பயன்படுத்த 1951-ல் 'மேசர்' என்ற ஒரு கருவியை உருவாக்கினார்.

இதையே மேலும் மாற்றி, அபிவிருத்தி செய்து ஒளிக்கதிரைச் செறிவூட்டும் முறையைக் கண்டுபிடித்தார். இதுவே லேசர் ஒளிக்கற்றை.

தனது கண்டுபிடிப்புக்களை விளக்கி, எச். டவுஸ், தனது நண்பர் ஆதர். எல். ஷ்காலோவுடன் சேர்ந்து 1958-ல் ஒரு கட்டுரையைப் பதித்தார்

இதில் லேசர் ஒளிக்கற்றையை உருவாக்கும் சாதனத்தின் அடிப்படை வடிவம் செயல் விளக்கமாகத் தரப்பட்டிருந்தது. அதோடு லேசர் ஒளிக்கற்றையின் பயன்களும் தரப்பட்டிருந்தது.

இக் கட்டுரை தொழில் துறையாளர்கள் பலரைக் கவர்ந்தது. டாக்டர் தியோடர் மெய்மான் என்பவர் செயற்கை மாணிக்கத்தால் ஆன ஒரு தண்டை அமைத்து, லேசர் ஒளிக்கற்றையை உருவாக்கக்கூடிய ஒரு கருவியைச் செய்தார்.

**சிக்கலான ஆபத்தான ஆபரேஷனைக் கூட மண்டையைப் பிளக்காமல் மிக இலகுவாக செய்து விடலாம், அது மட்டுமா? இமயமலை மிக மிக மெதுவாக மனிதனால் உணர முடியாத அளவுக்கு அசைந்தால்கூட அதனையும் கண்டு பிடித்து விடலாம் இந்த வல்லமை எல்லாவற்றையும் கொண்டிருக்கின்றது லேசர் ஒளி தற்பொழுது மருத்துவ, புவியியல், அணு இயல் பௌதிகத் துறைகளில் தன்னிகரில்லாமல் விளங்குகிறது இந்த லேசர்ஒளி**

இந்தக் கருவிகளை அமைக்கத் தேவைப்படும் மூலதனம், இடம் ஆகியவை பெரிய பிரச்சனையாக இருந்தன. அதோடு இப்படி ஒரு கருவியைத் தயாரித்துக் கொண்டால் அதை முழுவதுமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தேவையான தொழில் (நுட்ப) அறிவும், அதை அபிவிருத்தி செய்து கொள்ளக்கூடிய வசதியும் அன்று யாருக்கும் இல்லை. அதனால் இது பிரபலமடையவில்லை.

ஆனால் லேசர் ஒளிக்கற்றையின் விளக்க முடியாப் பயன்களை ஊகித்தநிபுணர்கள் இக் கருவியை எளிதில், செலவு அதிகமில்லாது கண்டுபிடிக்கக் கூடிய வழிகளை இடைவிடாது ஆராய்ந்தனர். அதில் வெற்றியும் பெற்றுள்ளனர்.

லேசர் ஒளியின்சக்தியானது (பவர்) மின்சாரத்தைப் போலவே 'வார்ட்ஸ்' அளவில் கணக்கிடப்படுகிறது.

கடினமான ஓர் உலோகத்தைத்துளையிட வேண்டுமா? நீருக்கடியில் அமிழ்ந்துள்ள இயந்திரத்தின் பழுதுபட்ட இணைப்பைப் பற்றவைக்க வேண்டுமா பாதுகாக்கப்பட்ட காப்பகங்களுக்குள் இயங்கிக் கொண்டிருக்கு ஓர் அணுவைச் செயலிழக்க வைக்க வேண்டுமா? லேசர் ஒளிக்கற்றையால் இயலும்!'

மருத்துவத் துறையில் லேசர் ஒளிக்கற்றையின் பங்கு மகத்தானது. கத்தியை எடுக்க அவசியமின்றிக் கட்டிகளைச்சுட்டுப் பொசுக்கி நீக்குகிறது. தசைகளைத் தைத்து இணைக்கிறது, ரத்த நாளத்தில் உருவாகும் அடைப்பை நீக்குகிறது, சிறுநீரகக் கல்லைக் கரைகிறது!

இன்று ஊசியால் இசைக்கப்பட்ட கிராமபோன் தட்டுக்கள் நாளடைவில் தேய்ந்த பழுதடைவதைத் தடுக்க, லேசர் ஒளிக்கற்றை கொண்டு இயங்க வைக்கப்படுகின்றன.

லேசர் ஒளிப்பாதையால் இயங்க வல்ல டெலிபோன் தொடர்புகள் வெற்றிகரமாகச் செயல்படுவதைக் கண்

—07ஆம் பக்கம் பார்க்க

# வன்னிச் செய்திகள்

## சம்பளம் இன்னும் இல்லை

ஒட்டறுத்தகுளம் காளை நிலைய ஊ ழியருக்கு மே மாதச் சம்பளம் இன்றுவரை வழங்கப்படவல்லையாம்.

துணுக்காய் மிருக வைத்தியர் அலுவலகத்தின் கீழ்இருந்து வரும் இக்காளை நிலைய உத்தியோகத்தருக்கு மட்டும் மே மாதச் சம்பளம் வழங்கப்படவில்லை.

அலுவலகத்தில் பணிபுரியும் சகல உத்தியோகத்தரும் மே மாதச் சம்பளத்தை கடந்த 17—ம் திகதி பெற்றுக் கெண்டே போதிலும் இவரது சம்பளம் அலுவலகத்திற்கு வந்தும் வழங்கப்படவில்லையாம்.

## செங்கதிர் வெற்றி பெற்றது

நெடுங்கேணி ஒலுமடு மகாவித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியில் செங்கதிர் இல்லம் முதலாம் இடத்தினை பெற்றுக்கொண்டது.

இரண்டாம் இடத்தினை வளர்மதி இல்லம் பெற்றது. பாடசாலை அதிபர் எஸ். கிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு நெடுங்கேணி உ. அ. அ. பி. பத்மநாதன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அப்பகுதி பிரதேச பொறுப்பாளர் பாலனும் விழாவில் கலந்து கொண்டார் என தெரிவிக்கப்பட்டது.

## நகர வாசிகளுக்குக் காணி

வவுனியா நகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் காணி அற்றவர்களுக்கு காணி வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குடியிருப்பதற்கென ஒருவருக்கு 20 பேச் வரையிலான காணி இத்திட்டத்தின்மூலம் வழங்கப்படவுள்ளது. இதற்குரிய விண்ணப்பங்கள், விபரங்கள் என்பன உரிய அதிகாரிகளின் ஊடாக விரைவில் கோரப்படவுள்ளன.

## வாக்காளர் இடாப்பு திருத்தம்

வன்னி தேர்தல் மாவட்டத்திற்கான 1990-ம் ஆண்டு வாக்காளர் இடாப்பு திருத்த வேலைகள் ஜூன் முதலாம் திகதி ஞதல் 30-ம் திகதிவரை அவ்வப்பகுதி கிராமசேவை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட உள்ளது.

இதுதொடர்பாக வவுனியா,முல்லைத்தீவு மாவட்டகிராம சேவையாளர்களுக்கு விளக்கம் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டுள்ளது. எனகச்சேரி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கான சகல ஒழுங்குகளையும் வன்னி தேர்தல் மாவட்ட அலுவலர் எம். திருநாவுக்கரசு செய்துள்ளார்.

## சுவிஸ் பிரதிநிதி மன்னார் விஜயம்

சுவிட்சர்லாந்து உள்ளக ஒத்துழைப்புத் தாபனத்தின் இலங்கைப் பொறுப்பாளர் செல்வி டொறதி ஜொகாறன் வன்னிப் பிரதேச கிராம அபிவிருத்தி நிறுவனத்தின் அழைப்பின் பேரில் மன்னாருக்கு விஜயம். மேற்கொண்டார்.

மேற்படி கிராம அபிவிருத்தி நிறுவனத்தால் வன்னிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பொருளாதார சமுகவியல் நடவடிக்கைகளை இவர் பார்வையிட்டார்.

மேற்படி விஜயத்தின்போது மன்னார் - வவுனியா - முல்லைத்தீவு - யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்து வந்திருந்த பிரதிநிதிக் குழுக்களுடனும் அவர் கலந்துரையாடினார்.

## 5-ம் திகதிக்கு முன் சம்பளம்

வவுனியா மாவட்டத்தில் நியமனம் பெற்றுள்ள பயிலுநர் ஆசிரியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகளை ஒவ்வொரு மாதமும் ஐந்தாம் திகதி வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ் ஆசிரியர்கள் கடமையேற்று இரண்டு மாதங்களுக்கு மேலாகி விட்டபோதிலும் நிர்வாக நடைமுறைகளில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இதுவரையிலும் சம்பளம் வழ்ங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பால் கொள்வனவுக்கு ஏற்பாடு

வவுனியாவில் உள்ள கிராமங்கள் தோறும் பால் கொள்வனவிற்காக வாகன வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வவுனியா கால்நடை வளர்ப்போர் சங்கத்தில் அங்கத்தவர்களாக இருப்போருக்கு மேலும் கடன் வசதி செய்து கொடுக்க ஆவன செய்யப்படும்.

ஏற்கனவே மேற்படி அங்கத்தவர்களில் சுமார் 150 பேருக்கு ஏழரை இலட்சம் ரூபா கடன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

## ராதா நினைவாக நாடகம்

லெப்-கேர்ணல் ராதா நினைவாக மன்னார் மாவட்ட ரீதியாக நடாத்தப்பட்ட நாடகப் போட்டியில் முழங்காவில் விநாயகர் விளையாட்டுக் கழகம் வழங்கிய நாடகம் முதலாம் இடத்தைப் பெற்றது.

### ஆயுதங்களை ஒருமுறை ஒப்படைத்தபோது

## எமமை அழிக்கத் துணி்ந்தவர்களிடம் எந்த நம்பிக்கையில் ஆயுதங்களை ஒப்படைப்பது?

**- வாஞ்சிநாதன்**

'தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்தால் அவர்கள் வட—கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தாராளமாகப் போட்டியிடலாம்' என்று அரசின் அமைச்சர் ஒருவர் சமீபத்தில் கூறியிருக்கிறார். எந்த அரசாயிருந்தாலும்சரி, எந்த நாடாயிருந்தாலும் சரி சுற்றிச் சுற்றிச் சுப்பரின் கொட்டிலுக்குத் தான் வருகின்றார்கள்... ஆயுதங்களை ஒப்படையுங்கள் என்பதை ஒரு வாய்ப்பாடாகவே வைத்திருக்கின்றார்கள்.

இவ்வாறு அண்மையில் வடமராட்சி கிழக்கு மாமுனை என்ற இடத்தில் நடைபெற்ற அணித்தலைவன் முத்து, அணித்தலைவன் சுலக்சன், இரண்டாம் அ...ந் தலைவன் சூரி மற்றும் இளம் புலிகளான தரன், கஜன், அசோக் ஆகியோரது முதலாவது நினைவுதினக் கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் முன்னணியில் உரையாற்றும்போது 'விடுதலைப்புலிகள்' பத்திரிகையின் ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவரும், கவிஞருமான திரு. மு. வே. யோ. வாஞ்சி நாதன் தெரிவித்தார்.

எமது கைகள் வெறுமையாக இருந்தபோது காலத்துக்குக் காலம் வன்முறைகள் மூலம் எமது மக்களைக் கொன்று குவித்தவர்கள். அந்த மக்களைக் காப்பாற்றுவதற்காக நாம் ஆயுதமேந்திய போது 'போட்டு விடுங்கள் அதை'.... என்று கூற அவர்களுக்கு என்ன அருகதை இருக்கிறது? எமது தலைவர் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரனும், எமது இயக்கத்தின் ஆரம்பகால உறுப்பினர்கள் பலரும், குருவி சேர்ப்பது போல் ஒவ்வொன்றாகச் சேர்த்த ஆயுதங்கள் இவை...

சீலன், ஆனந்தன் போன்றவர்கள் ஒவ்வொரு ஆயுதத்திற்காகத் தம் உயிரையே அர்ப்பணித்திருக்கிறார்கள் ... அப்படிச் சேர்த்த ஆயுதங்களை மக்களின் நலனுக்காக ஒருமுறை ஒப்படைத்தோம்.

ஆனால் அதன் பின் எம்மை முற்றாக அழிக்கத் துணிந்தார்கள்... மீண்டும் ஒருமுறை எந்த நம்பிக்கையில் அவைகளை நாம் ஒப்படைக்க முடியும்?'

அவர் அங்கு மேலும் பேசும் போது கூறியதாவது:- 'எமது மக்களின் நன்மைக்காகவும் சர்வதேசரீதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் தான் ஈழத் தமிழர்களின் ஒட்டுமொத்த ஆதரவைப் பெற்ற இயக்கம் என்பதையும் நிரூபிக்கவே, இடைக்கால த் தீர்வாக மாகாண சபையை ஏற்க முடிவு செய்தோம்... ஆனால் அதைக் கலைப்பதற்குக் கூட இந்த அரசு முடியாமல் திணறுகிறது' எனக் கூறினார்.

## தட்டுப்பாடு

பண்டத் தரிப்பு அரசினர் 'கிராமிய வைத்தியசாலையில் திரிபோஷ' மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலையில் நடைபெறும் கர்ப்பிணிகள் சிகிச்சை கிளினிக்கிலும் சிறுவர் நல சிகிச்சை கிளினிக்கிலும் போஷாக்கு குறைந்தவர்களுக்கு இந்த திரிபோஷமா இலவசமாக வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.(13)

## கிளை மீண்டும் இயங்குகிறது

சில ஆண்டுகளாக மூடப்பட்டிருந்து இயங்காமல் இருந்த யாழ் ப. நோ. கூ. சங்கத்தின் கிளைகளில் ஒன்றான குமரன் கிளைஇல. 8மீண்டும்அக்கிளையின் பாவனையாளர் நலன் கருதிதிறந்துவைக்கப்பட்டது.

சங்கத் தலைவர் கலாநிதி எஸ். மோகனதாஸ் திறந்து வைத்தார்.

இதில் கிளை இல. 8 ன் கிளைக்குழுத் தலைவர் திரு. க.கிருஷ்ணபிள்ளை (மாயவர்) செயலாளர் திரு.ஆ.ந. யோகசுந்தரம், பொதுச் சபை உறுப்பினர் திரு. சோ. சீவரத்தினம் கிளைக்குழு அங்கத்தவர் திரு. மு. துரைராசா, பாவனையாளர் சார்பில் திரு. ந.நடேசன் முன்னாள் மராமத்து பொறியியலாளர் ஆகியோர் சிறப்புரையாற்றினர்

அத்துடன் சங்க உபதலைவர் திரு. இராஜரட்ணம் நெறியாளர்கள் திரு. M. ஜெகதீசன் திரு. மரியாம்பிள்ளை ஆகியோரும் இவ் விழாவில் கலந்து கொண்டனர்.

## விரைவில் நாரந்தனைப் பால வேலை

(காவலூர்)

நாரந்தனை கண்ணகை அம்மன் கோவிலடிக்கு அருகாமையிலுள்ள வீதி பால வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட்வுள்ளன.

இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இக் கடல் வீதி அமைக்கப்படாத காரணத்தினால் அனலைதீவு எழுவை தீவுகளுக்கு கடல் பிரயாணம் செய்யும் மக்கள் மிகுந்த கஷ்டங்களை அனுபவித்து வருகின்றார்கள். (42)

## அளவெட்டி வைத்தியசாலை அபிவிருத்திக்கென சபை

(சங்கானை)

அளவெட்டி அரசினர் வைத்யசாலையின் அத்தியாவசிய தேவைகளைச் சுகாதார திணைக்களத்தின் கவனத்திற்கு கொண்டு வந்து நிவர்த்தி செய்வதற்கும், வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதற்கும் ''அளவெட்டி அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபை'' என்ற பெயரில் புதிய சபையொன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சபையின் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரம் பின் வருமாறு: தலைவர்:- திரு. சோ. அருணாசலம், உபதலைவர்:- பண்டிதர் கே. நாகலிங்கம், செயலாளர்:- திரு. த. கனகரத்தினம், உபசெயலாளர்:- திரு. வ. சின்னப்பு, பொருளாளர்:- திரு. க. கந்தையா, செயற்குழு உறுப்பினர்களாக ஆறு பேர்தெரிவு செய்யப்பட்டனர். (13)

## பச்சிலைப்பள்ளி கூ.சங்கம் 2 அந்தர் கம்பி அன்பளிப்பு

பளை அரசினர் வைத்தியசாலையின் வேலிகள் திருத்துவதற்கென பச்சிலைப்பள்ளி பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம் இரண்டு அந்தர் முட்கம்பியை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

வைத்தியசாலை அபிவிருத்திச்சங்கம் விடுத்த வேண்டுகோளை இயக்குநர் சபை ஏற்றுக் கொண்டதையடுத்து முட் கம்பி வழங்கப்பட்டதாக வ. பீ. ஜோர்ச் தெரிவித்தார். (ப.3)



லண்டன் வெம்பிளி நகரில் அமைந்திருக்கும் தமிழ் அனாதைகள் அறக் கட்டளையினர் இலங்கை வாழ் தமிழ்அனாதைக்குழந்தைகளுக்கென பல்வேறுவழிகளில் நிதி உதவிவழங்கி வருகின்றனர். நன்கொடையாளர்கள் மூலமும், கலை நிகழ்ச்சிகள் நடத்துவதன் மூலமும் வசூலிக்கப்படும் நிதி இலங்கைத் தமிழ் அனாதைக் குழந்தைகள் இல்லங்கள், நிறுவனங்கள் போன்றவற்றிற்கு வழங்கப்படுகின்றது.

கடந்த ஏப்ரல் 28 ஆம் திகதி வெம்பிளி பிரெண்ட் டவுன் ஹோலில் மாபெரும் கலைவிழா ஒன்று தமிழ் அனாதைகள் அறக் கட்டளையினரால் நடாத்தப்பட்டது. இக் கலை நிகழ்ச்சிக்கு பிரெண்ட் மேயர் கவுன்சிலர் லென் வில்லியம்ஸ் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டார். பரத நாட்டியம், வாத்திய விருந்து, இசை நிகழ்ச்சிகள் என்பன போன்ற கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன இக் கலைவிழாவில் பல்வேறுபட்ட இலங்கைத் தமிழ்க்கலைஞர்களும் கலந்து கொண்டனர்.



மூதூர் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கூட்டத்தை மேற்படி முன்னணியின் செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். படத்தில் விடுதலைப்புலி மக்கள் முன்னணியின் மூதூர் பிரதேச அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் அரசன், விடுதலைப்புலிகள்' ஆசிரியர் குழுவைச் சேர்ந்த கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதர் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# ஜூலையில் 5 நாட்கள் நிகழும் தமிழ் இலக்கியப் பெருவிழா

## ரூ.10 லட்சம் செலவிடப்படும்

எட்டு வருட இடைவெளியின் பின் கொழும்பில் தமிழ் இலக்கிய விழா நடைபெறவுள்ளது.

இதற்கென பத்து இலட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது

இந்து சமய கலா சார. தமிழ் அலுவல்கள் ராஜாங்க அமைச்சு இவ்விழாவை யூலை மாதப் பிற்பகுதியில் கொழும்பில் நடாத்தவுள்ளது.

இவ்விழாவில் 18 எழுத்தாளர்களுக்கும் தமிழ் இலக்கியப் பணிபுரிந்த 7 பேருக்கும் பணப் பரிசில்களும், விருதுகளும் வழங்கப்படவுள்ளன.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ கலந்து கொள்வார்.

5 நாட்கள் நிகழவுள்ள இப்பெருவிழாவில் இலங்கை எழுத்தாளர்களின் புத்தகம் மற்றும் ஓவியக் கண்காட்சியும் இடம்பெறும்.

மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் படித்தல், கவியரங்கு, கலை நிகழ்ச்சிகள் ஆகியனவும் நடைபெறும்.

1981 88 வரை எழுதப்பட்ட புத்தகங்களும், 1989ல் எழுதப்பட்ட புத்தகங்களுமே போட்டிக்கு அனுமதிக்கப் படவுள்ளன.

நாவல்,சிறுகதை,இலக்கியம் அறிவியல்,இலக்கிய விமர்சனம் ஆய்வு, கவிதை, நாடக நூல்,சமூக அறிவியலும், மானுடவியலும் ஆகிய துறைகளுக்கு பரிசில்கள் வழங்கப் படவுள்ளன.

கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் ராஜாங்க மந்திரி திரு.பி.பி தேவராஜ் மேற்படித் தகவல்களை வெளியிட்டார்.

## இன்றைய நிகழ்ச்சிகள்

### இந்துமகளிரில்

யாழ். இந்து மகளிர் கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பி.ப. 2. 15 மணிக்குக் கல்லூரி அதிபர் திருமதி தி. நாகராசா தலைமையில் நடைபெறும்.

யாழ். உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு சி.தியாகராசா பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். திருமதி தியாகராசா பரிசில்களை வழங்குவார்.

### ஸ்ரான்லியில்

யாழ். கனகரத்தனம் மத்திய மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் நினைவு தினமும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

பிரதம அதிதியாக யாழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. தியாகராசா கலந்து கொள்ளுவார். நிறுவுநர் நினைவுரையை கலாநிதி சபா ஜெயராசா நிகழ்த்துவார்.

### சாவகச்சேரியில்

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று முதலாம் திகதி கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவின் முதன்மை விருந்தினராக வட மாகாண பிராந்திய கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கமும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. தியாகராசாவும், கௌரவ விருந்தினராக தென்மராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் ச. தனஞ்செயனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பரிசில்களை திருமதி தேவராணி சுந்தரலிங்கம் வழங்கவுள்ளதாக கல்லூரி அதிபரும், சாவ. தெற்கு கொத்தணி அதிபருமான வே. குகதாசன் அறிவித்துள்ளார்.

(ப.3)

# 'சொக்கன் மணிவிழா' நாளை 2-ம் திகதி நடைபெறும்

முது பெரும் எழுத்தாளர் சொக்கனின் மணி விழா நாளை இரண்டாம் திகதி சனிக்கிழமை யாழ் நாயன் மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் தி.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வைத்திய கலாநிதி இராமநாதன் அரங்கில் சொக்கனின் ஆக்கங்களின் கண்காட்சி காலை 9முதல் நண்பகல் 12 வரை இடம் பெறும்

பிற்பகல் 2.45 முதல்4.30 வரை சைவப் பெரியார் சு.பரநிருப சிங்கம் அரங்கில் வாழ்த்துரை இடம் பெறும். நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரியர் சுவாமிகள் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம், மகாராஜ ஸ்ரீ ச.து. சண்முகநாதக் குருக்கள், பிரதம சிவாசாரியார் அருள்மிகு மாவை முருகன் தேவஸ்தானம், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைவர் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்,சி. தியாகராசா உதவிக்கல்விப்பணிப்பாளர் யாழ் கோட்டக் கல்வி அலுவலகம் கலாநிதி சு.மோகனதாஸ் இரசாயனத்துறையாழ்பல்கலைக் கழகம், சி.மு.கந்தையா அதிபர் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை,இ.ஜெயராஜ கம்பன் கழகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவார்கள்.சொக்கனுக்குபொன்னாடை போர்த்திக் கௌரவித்தலும் இடம்பெறும்.

பெரியார் சம்பந்தர் அரங்கில் மணி விழா மலர் வெளியீடு நடைபெறும். வெளியீட்டுரையை ச.வரதராசன் ஆய்வுரையை மனேன்மணி சண்முகதாஸும் நிகழ்த்துவர்.

மாலை 5.30 முதல் 7.30 வரை நடைபெறும். பேராசிரியர் சு. வித்தியானந்தன் அரங்கில் சொக்கனின் 'மாருதப்பிரவல்லி' நூல் வெளியீடு நடைபெறும். வெளியீட்டுரையைப் பேராசிரியர் சி. சிவஞானசுந்தரமும் ஆய்வுரையை குழந்தை ம. சண்முகலிங்கமும் நிகழ்த்துவார்கள்.

# வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி தெரிவானது

வவுனியா மாவட்டத்தில் சிறந்த கிராமோதய சபையாக நெடுங்கேணி கிராமோதய சபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் இப்போட்டி சமீபத்தில் நடத்தப்பட்டது

பத்தாயிரம் ரூபா பரிசினை குறிப்பிட்ட சபை பெற்றுள்ளது.

கடந்தகால அசம்பாவித காலத்தில் பல இன்னல்களுக்கு மத்தியில் மக்களுக்கு சேவையாற்றியதுகுறிப்பிடத்தக்கது. இதன் தலைவராக திரு. பீட்டர் பொன்கலன் உள்ளார். (11)

# செய்தி மஞ்சரி

## மாதாந்தம் பரீட்சை

சகல பாடசாலைகளிலும்மீண்டும் மாதாந்தப் பரீட்சைகள் நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் கல்வி ஆற்றலை மாதாந்தம் மதிப்பீடு செய்வதற்கு உடனடியாக மீண்டும் இந்தப் பரீட்சைகள் நடத்தப்பட வேண்டும் என கல்வி அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இவற்றிற்குப் புறம்பாகவும் தவணைப் பரீட்சைகளும் தவறாது நடத்தப்படல் வேண்டும் எனவும் உத்தரவிடப் பட்டுள்ளது.

## சுபநேரம்

மேலதிக கட்டணமாக 500 ரூபாவை செலுத்தி ஒரே நாளில் கடவுச் சீட்டை பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளை குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் செய்துள்ளது.

பூரணமான ஆவணங்களுடன் மேலதிக கட்டனமாக ரூபா 500 செலுத்தி காலை 8 மணிக்கும் பிற்பகல் 2மணிக்கும் இடையில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கான கடவுச் சீட்டுக்கள் மட்டுமே அன்றைய தினம் பிற்பகல் 3. 30 மணிக்குப்பின்னர் வழங்கப்படும்.

இப் புதிய திட்டம் இன்று வெள்ளிக்கிழமையில் இருந்து நடைமுறைப் படுத்தப்படும் இதற்கான விண்ணப்பப் படிவங்களை இலவசமாக விநியோகிக்கவும் அரசு தீர்மானித்துள்ளது.

## இங்கு கைதானவர் அங்கு செல்வார்

போதைப் பொருள் குற்றச் சாட்டின் பேரில் ஆஸ்திரேலிய அரசினால் தேடப்பட்டு வரும் பூடானி என்ற இலங்கையர் ஆஸ்திரேலிய அரசிடம் ஒப்படைக்கப்படுவார்.

மேற்படி நபரை ஒப்படைக்கும்படி ஆஸ்திரேலிய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தை கேட்டுள்ளது. பிரதிவாதியை ஒப்படைப்பதற்காக வெளிநாட்டு அமைச்சுக்கு அறிவிற்கும் வரை அவர் விளக்க மறியலில் வைக்கப்படுவார்.

பூடானிக்கு எதிராக ஆஸ்திரேலியாவில் வழக்கு தொடரப்படவிருக்கின்றது.

## வெங்காயக் கப்பல் வந்தது

550 தொன் பெரிய வெங்காயத்துடன் கப்பல் ஒன்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இதேவேளை 1450 தொன் பெரிய வெங்காயத்தை ஏற்றிக் கொண்டு மற்றொரு கப்பல் விரைவில் கொழும்பு வந்தடையலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த இரண்டாயிரம் தொன் வெங்காயம் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் மூலம் விரைவில் விநியோகிக்கப்படும். இதனால் தற்போது நாட்டில் நிலவும் பெரிய வெங்காயத் தட்டுப்பாடு பெருமளவு குறையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எயர் லங்கா விமானி கைது

சிங்கப்பூரில் உள்ள கடை ஒன்றில் இருந்து சுமார் 40 அமெரிக்க டொலர் பெறுமதியான சஞ்சிகைகளை திருட முயன்ற எயர்லங்கா விமானி ஒருவர் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டார்.

இதனால் இவர் ஓட்டிச் சென்ற யூ. எல் 303 என்ற விமானம் ஒன்பது மணிநேர காலதாமதத்திற்குப் பின்னரே கட்டுநாயக்கா விமானநிலையத்தை வந்தடைந்தது.

கைது செய்யப்பட்ட மேற்படி விமானி சிங்கப்பூர் அதிகாரிகளின் தீவிர விசாரணையின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இவருக்கு பதிலாக வேறு ஒரு விமானி சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்டார். இவர் அதே விமானத்தில் சாதாரண பயணியாக இங்கு அழைத்து வரப்பட்டார்.

## 72 உறுப்பினர் பதவி இன்று காலி

வடக்கு—கிழக்கு மாகாண சபையின் 72 உறுப்பினர்களின் பதவிகளும் இன்று முதல் காலாவதியாகின்றன.

இது குறித்து மாகாண சபையில் அங்கம் வகிக்கும் சகல அரசியற் கட்சிகளின் செயலாளர்களுக்கும் அறிவிக்கப்படும்.

மாகாணசபைச் சட்டத்தின்படி பதவி இழக்கும் இந்த உறுப்பினர்களுக்குப் பதிலாக புதியவர்களை நியமிக்கும்படி அக்கட்சிகளின் செயலாளர்களை தேர்தல் ஆணையாளர் கோருவார்.

## 'பஜேறோ' வெளியில் விற்பனை

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மாகாண சபை உறுப்பினர்களுக்கும் மாநகர முதல்வர்களுக்கும் அரசாங்க விநியோக திணைக்களத்தினால் சலுகை விலைக்கு வழங்கப்பட்ட 'பஜேறோ' ஜீப்வண்டிகள் பல வெளியாருக்கு அதிகவிலைக்கு விற்கப் படுவதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவாம்.

இது குறித்த விசாரணைகள் யாவும் விசேட பொலிஸ் கோஷ்டியினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## யாழ். நகரில் லண்டன் பரீட்சை

'சர்வதேச கணக்குப் பதிவாளர்கள் நிறுவனம்', 'இன்ஸ்ரியூட் ஒப் டேட்ரா புறோசசிங் மனேச் மென்ட்' ஆகிய லண்டன் பரீட்சைகள் எதிர்வரும் 5 ஆம் 6 ஆம் 7 ஆம் 8 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்குத் தெருவில் உள்ள 'ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் அட்மினிஸ்ரேசன்' நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

புதிய திட்டம்

# அரசாங்க ஊழியர்களின் இடமாற்றத்துக்கு வருகிறது

அரச ஊழியரின் இடமாற்றத்துக்காக புதிய இடமாற்றத்திட்டம் ஒன்று தயாரிக்கப்படவுள்ளது.

பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணித்துள்ளார்.

அரசாங்க ஊழியர்கள் தத்தம் கிராமப் பகுதிகளுக்கும் வசதியான பகுதிகளுக்கும் பல்வேறு தேவைகளின் பேரில் இடமாற்றம் கோரியிருக்கிறார்கள்.

இவர்களுக்கு வசதியாகவே இத்திட்டம் தயாரிக்கப்படவுள்ளது.

## அடகு நகைகள் மீளளிப்பு; மக்கள் வங்கி அறிவுறுத்தல்

அடகு வைத்த நகைகளை மீளப்பெறுவதற்காக கடந்த வருடம் செப்டெம்பர் மாதத்திற்குப் பின்பு பணத்தைச் செலுத்தியவர்களுக்கு ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் அவற்றை ஒப்படைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக மக்கள் வங்கியின் யாழ் பிராந்தியத் தலைமையகம் அறிவித்துள்ளது.

எனவே பொதுமக்கள் அடகு வைத்த தமது நகைகளை விரைவாக மீட்டுக்கொள்ளவிரும்பின் ஜூன் மாதம் 6ம் திகதிக்குமுன் உரிய கிளைகளில் பணத்தைச் செலுத்த வேண்டுமென தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் செப்டெம்பர் மாதத்திற்கு முன் பணத்தைச் செலுத்தியவர்களது நகைகள் மீளளிக்கப்பட்டு விட்டன என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## உங்களுடையதா?

உருத்திரபுரத்தைச் சேர்ந்த சரவணமுத்து வேலுப்பிள்ளை என்பவருடைய தேசியஆள் அடையாளஅட்டை கண்டெடுக்கப் பட்டு முரசொலி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆசிரிய பீடத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## தொல்புரம் அம்பாள் உற்சவம்

தொல்புரம் அருள்மிகு ஆதி முத்துமாரி அம்பாள் வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது 8—ம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவுறும் மறுநாள் மாலை அம்பாள் கிராம ஊர்வலம் நடைபெறும்.

## அளவெட்டி மருந்தகத்திற்கு புதிய கட்டிடம்

(சங்கானை)

அளவெட்டி அரசினர் வைத்தியசாலையில் புதிதாக நிறுவப்படவுள்ள மருந்துச்சாலைக் கட்டித்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் 4—ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளது

அளவெட்டி அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர். எஸ். தங்கவேல் தலைமையில் நடைபெறவுள்ள இவ் வைபவத்தில் யாழ் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ந. கனகசபை பிரதம அதிதியாக கலந்து கொண்டு சம்பிரதாய முறைப்படி அடிக்கல்லை சுப வேளையில் நாட்டி வைப்பார்.

சுமார் 30 வருட காலமாக தனியார் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் இந்த மருந்துச்சாலை அளவெட்டி அரசினர் பிரசவ விடுதி தற்போது அமைந்துள்ள காணியில் நிறுவப்படவுள்ளது.

சுமார் 4 இலட்சம் ரூபா செலவில் நிறுவப்படவுள்ள இக் கட்டிடத்தின் கட்டிட வேலைகளை அளவெட்டி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் ஒப்பந்த அடிப்படையில் பொறுப்பேற்றுள்ளது (13)

## சுவையான செய்திகள்

### அமாவாசைக் கொலைகள் ஏன்?

இந்தியாவில் ஒவ்வோர் அமாவாசை அன்றும் பெரிய கொலைக் குற்றங்கள் சராசரியாக மூன்றாவது நடக்கின்றன என்று பாட்னாவைச் சேர்ந்த டாக்டர் தாக்கர் என்பவர் கண்டுபிடித்திருக்கிறார்.

இதே கருத்தை ஃப்ளோரிடாவின் மியாமி பல்கலைக் கழகமும் கண்டுபிடித்திருக்கிறது. கடலில் அமாவாசை அன்று கொந்தளிப்பு ஏற்படும் போது அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும், இந்தியாவில் டெல்லியிலும் அதிகமாகப் பூமி பாதிக்கப்படுகிறது.

அந்தப் பகுதியில் பூமியில் வசிக்கும் மனிதர்களின் மன நிலையும் பாதிக்கப்படுவதால் கொலை செய்கிறார்கள் என்பதைச் சமீபத்தில் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதற்காகப் பத்தாண்டுகளாக நடந்த கொலைகளை ஆராய்ந்து கண்டு பிடித்திருக்கிறார்கள். டெல்லியில் ஏன் வன்முறை அதிகம் என்பது இப்போது தெளிவாகிறது அல்லவா?

### நாய் படும் பாடு

குதிரை, ஒட்டகம், எலி, பாம்பு முதலியவற்றைச் சாப்பிடும் சீனர்கள் கூட நாயின் கறியை சமைப்பது இல்லை. காரணம் நாயை அவர்கள் மனித குலத்திற்குச் சேவை செய்ய வந்த உயிரினமாக எண்ணுகின்றனர்.

தென் கொரியா மக்களோ ஆடு, மாடு இவற்றைத் தவிர நாய்க்கறியில் தான் அதிகம் சுவை இருக்கிறது. சத்து இருக்கின்றது என்று பிரியமாகச் சாப்பிடுகிறார்கள்.

நாய்க்கறி விற்பனை இந் நாடுகளில் தடைசெய்யப்பட்டதால். கறுப்பு மார்க்கெட்டில் நாய்க்கறி விற்பனை தற்சமயம் வெகு மும்முரமாக நடைபெறுகின்றது.

### அம்மா பெயர் ஏன்?

மொரீசியஸ் தீவில் இருப்பவர்கள் தங்கள் பெயருடன் தங்கள் தாயாரின் பெயரை இணைத்துக் கொள்கின்றனர்—தந்தையின்பெயரை இணைத்துக்கொள்வதில்லை.

இதற்குக் காரணம் உண்டு. முதலில் பிரெஞ்சு நாட்டுக்காரர்கள் தான் மொரீசியஸ் தீவில் அடியெடுத்து வைத்தனர். பின்னர் அவர்கள் அந்நாட்டை வளப்படுத்த நீக்ரோ மக்களை கொண்டு வந்து இறக்குமதி செய்தனர். அவர்கள் கடுமையாக உழைத்தாலும் கட்டுப்பாடில்லாமல் இருந்ததினால் புதுவையிலிருந்து 300 தமிழ் ஆண்களை பிரெஞ்சுக் காரர்கள் அழைத்துச்சென்றனர். பின்னர் அவர்கள் தேவைக்காக 100 தமிழ்ப் பெண்களை அழைத்துச் சென்றனர். இந்த 300 ஆண்களும், 100 பெண்களும் ஒரே கொட்டகையில் அடைக்கப்பட்டனர்.

அவர்கள் ஒன்றாக வாழ்ந்ததால் அப் பெண்களுக்குக் கணவன் என்று எவரும் இல்லாது போயினர். அவர்களுக்கு பிறந்த குழந்தைகளுக்குத் தந்தை யாரென்று தெரியாமல் போய்விட்டது.

அதனால்த்தான் அவர்கள் தங்கள் தாயாரின் பெயரைத் தங்கள் பெயரோடு இணைத்துக் கொண்டனர்.

## மருந்தகம் பூட்டு; மக்கள் தவிப்பு

(தாளையடி)

வடமராட்சி கிழக்கிலுள்ள முள்ளியான் மத்திய மருந்தகம் கடந்த பத்துநாட்களாக மூடப்பட்டிருப்பதால் இப்பகுதியிலுள்ள மக்கள் சிகிச்சை பெறுவதற்கு சுமார் 10, 15 மைல் தூரத்திலுள்ள பளை மருதன்கேணி கிராமிய வைத்தியசாலைக்குசெல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (18)

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி

கைதடி வடக்கைச் சேர்ந்தவரும் யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதியில் கடமையாற்றும் திரு. ஆ. சி. சுப்பிரமணியம் தம்பதிகளின் புதல்வியுமாகிய ரேணுகா சுப்பிரமணியம் 1989 ஆம் ஆண்டு அகில இலங்கை 5ம் ஆண்டு மாணவர்களுக்காக நடாத்தப் பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து கல்வி அமைச்சின் பணிப்பின் பேரில் யாழ். வேம்படி மகளிர் உயர் கல்லூரியில் படித்து சீலம் பெற வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இவர் ஆரம்பக் கல்வியை யாழ். புனித யோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் கற்றுத் தேறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முரசொலிக்கு வந்த கடிதம்

### வெள்ளாடைகள் எப்போதும் வெண்மையாகவே இருக்குமா?

ஆசிரியர்
முரசொலி

தற்போது யாழ். நகரில் உயர்தரவகுப்புக்கள் உள்ள பாடசாலைகளில் வருடாவருடம் நடாத்தப்படும் மதியபோசன விருந்து வைபவங்கள் நடைபெற்றுவருகின்றன.

இந்த விருந்து வைபவத்திற்கு சகல பாடசாலைகளிலிருந்தும் குறிப்பிட்ட சில மாணவ பிரதிநிதிகள் அழைக்கப்படுவது வழக்கம்.

யாழ் நகரிலுள்ள குறிப்பிட்ட ஒரு கல்லூரியில் சில மாணவர்கள் இந்த விருந்துபசார நிகழ்ச்சிகளில் மேற்படி கல்லூரி உயர்வகுப்பு மாணவர் ஒன்றியத்தின் அனுமதியின்றி பங்குபற்றிவருகின்றனர். இவ்வாறு அனுமதிபெறாது செல்பவர்களில் யாழ். கல்வி அதிகாரி ஒருவரின் மகனும் ஒருவர்.

இவர்கள் இவ்வாறு நடந்து கொள்வதனால் இக்கல்லூரியின் உயர்வகுப்பு மாணவர்களாகிய எமக்கு அவமரியாதை ஏற்படுவதுடன், கல்லூரியின் கௌரவமும் பாதிக்கப்படுகின்றது. சக கல்லூரி மாணவர்கள் எம்மை ஒரு பஞ்சக் கண்ணோட்டத்துடனும் பார்க்கின்றனர். எனவே இனியாவது இவர்கள் திருந்தி நடப்பார்களா?

யாழ்ப்பாணம் சகமாணவர்கள்
(பெயர் குறிப்பிட விரும்பாத சில மாணவர்கள் இக்கடிதத்தில் ஒப்பமிட்டுள்ளனர்)

### பகலில் பாடசாலை; இரவில் மாட்டுத் தொழுவம்

ஆசிரியர்
முரசொலி

வவுனியா மாவட்டத்தில் புளியங்குளம்—முல்லைத்தீவு வீதியில் அமைந்துள்ள நெடுங்கேணி மகா வித்தியாலயம் பல பாடசாலைகட்கு மூலாதாரப் பாடசாலயாக விளங்குகிறது. இப்பாடசாலையின் அதிபர் 1989 அக்டோபரில் இடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம் சென்றார். இதன் பின்னர் தகுதிவாய்ந்த, அதிபர் ஒருவரை நியமிக்குமாறு பல தடவைகள் கல்விப்பணிமனையின் அதிகாரிகளைக் கேட்டபோதும் அவர்கள் தட்டிக்கழித்து வருகின்றனர். சுமார் 1000 மாணவர்களைக் கொண்ட இப்பாடசாலைக்கு தகுதிவாய்ந்த நிர்வாகத்திறன்மிக்க அதிபர் இல்லாமையால் பாடசாலையின் வளர்ச்சி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் நான்கு புற வேலிகளும் அடைக்கப்படாமையால் கட்டாக்காலி மாடுகளின் இராக்கால உறைவிடமாகப் பாடசாலை விளங்குகிறது. பாடசாலையில் மாணவர் தொகைக்கேற்ப போதுமான கட்டிட வசதி இல்லாமையால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். கல்விப்பணிமனையின் அதிகாரிகள் வவுனியா மகாவித்தியாலய மாணவர்களின் கோரிக்கையை நிறைவேற்றியது போன்று கிராமப்புறப் பாடசாலையான எமது பாடசாலையின் தேவைகளையும் நிறைவேற்றுவார்களா?

நெடுங்கேணி க. தேவநாதன்

மன்னார் மாவட்டத்திற்கு

## முதற் தடவையாக நீர் மின் விநியோகம் கிடைக்கிறது

மன்னார் மாவட்டத்திற்கு முதல் தடவையாக நீர் மின் விநியோகம் கிடைத்துள்ளது.

மேற் கொளளப்பட்ட முன் நடவடிக்கைகளின் காரணமாக மன்னார் மாவட்டத்திற்கும் நீர் மின் வி நியோகம் கிடைத்துள்ளது. இது வரை காலமும் மன்னார் மாவட்டதிற்கு டீசல் இயந்திரங்கள் மூலமே அதுவும் குறிப்பிட்ட சில மணித்தியாலங்களுக்கே மின் வழங்கப் பட்டு வந்தது.

இந்த நீர் மின் விநியோகத்தால் மன்னாருக்கு 24 மணித்தியாலமும் மின்சாரம் கிடைக்க வழி பிறந்துள்ளதுடன் காலப் போக்கில் முழுமாவட்டத்திற்கும் புதிய மின்மார்க்கங்களை இணைபதன் மூலம் சகல பகுதிகளும் அபிவிருத்தி அடைவதற்கு வாய்ப்புண்டாகும்.

இந்தப் புதிய மின்மார்க்கம் மதவர்ச்சியில் இருந்து அனுராதபுரத்துடன் தொடர்பாக தள்ளாடி ஆரம்ப மின் நிலையம் வரை செல்கிறது. (4

கிளிநொச்சி மாவட்டத்தில்

## சூழல் வெப்பநிலை உயர்வு நோயாளர் தொகை அதிகரிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வரட்சி நிலை காரணமாக நோய்கள் மோசமாக பரவிவருவதாகவைத்தியசாலை வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

சில காலங்களுக்கு முன்னர் கட்டுப்படுத்த முடியாமல் இருந்த மலேரியாக் காய்ச்சல் தற்போது குறைவடைத்துள்ளதாகவும் தற்போதைய சூழல் வெப்பநிலை உயர்வு காரணமாக பல நோய்கள் ஏற்படுவதாகவும் மேலும் அவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (03)

## இன்று நாள் எப்படி?

மேடம்: புகழ் தேடி வரும், வாகன சுகம், வணிகர்கள் கடற்தொழில் இயந்திரத் தொழில் மூலம் இலாபம்.

இடபம்: உயர்பதவி, புதுத் தொழில், புகழ் தேடி வரும், தூரத்து செய்தியால் நன்மை.

மிதுனம்: தேடியவர் வருகை, வாகன இலாபம், வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம்.

கடகம்: பணவருகை, புதுத் தொழில், புண்ணிய வழிபாடு, வாகன சுகம், திடீர்ப் பிரயாணம்.

சிங்கம்: விவாக நிச்சயம், விருந்துபசாரம், வெளியூர் செய்தியால் நன்மை, தடைப் பட்ட பணவரவு.

கன்னி: வாக்குப்பலிதம் உயர் பதவி, உத்தமருறவு, தேடியவர் வருகை, விவாக நிச்சயம்.

துலாம்: பணமுடை, இராஜ பயம், தூரத்து பிரயாணம், வாகன மாற்றம், பெரியோர் ராசி.

விருச்சிகம்: சுகஜீவியம், வாக்குப்பலிதம், வணிகர்கள் கடற்தொழில், இயந்திரத் தொழில் மூலம் இலாபம்.

தனுசு: தேடியவர் வருகை, கலைஞர்கள் கௌரவிக்கப் படல், விவாக நிச்சயம்.

மகரம்: புகழ்தேடி வரும், கல்வியால் தொழில், காதலர் மகிழ்ச்சி, தூரத்துப் பிரயாண நிவர்த்தி.

கும்பம்: வாக்குக்கலகம், நீண்ட நாள் தடை நீங்கும், புதுத்தொழில். வாக்கு சாதுரியம்.

மீனம்: பணவரவு, வாகன சுகம், இனசன மகிழ்ச்சி, உத்தியோக உயர்வு, சுகஜீவியம், புகழ்தேடி வரும்.

**யாழ். சோதிடர்**
**ச. அரியநாயகம்**

## வானொலியில் இன்று

**வெள்ளி 01. 06. 90**

காலை

5.05 திருமுறைப் பாடல்— பராசக்தி விநாயக— தேவராஜா
5.30 பாமாலை— உமதேவி துதிமாலை
8.00 வாத்திய மஞ்சரி
8.15 மெல்லிசைப் பாடல்கள்

பகல்

10.00 இசையமுதம்
10.30 பக்திமஞ்சரி
11.00 நாதஸ்வரம்—ஷேக் சின்னமௌலானா

மாலை

6.15 திருவாசகம்— எஸ். கணபதிப்பிள்ளை
துதிப்பாடற்பயிற்சி— எம். நவரட்ணம்
களத்துமேடு— கேள்விபதில்.
விவசாய நாடகம்— வயலோடு வசந்தங்கள்
மெல்லிசைப் பாடல்கள்

இரவு

பக்திப்பாடல்கள்
செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்
கதாப்பிரசங்கம்— இரா சிவ அன்பு
நினைவில் நிறைந்தவை

## 'தி ஐலன்ட்' கட்டுரை போட்டியில் தர்சினி தெரிவு



'தி ஐலன்ட்' ஆங்கில நாளிதழ் புது வருடத்தை முன்னிட்டு, அகில இலங்கை ரீதியாக நடாத்திய கட்டுரைப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் உயர் கல்லூரி மாணவியாய் இருந்த செல்வி தர்சினி கணபதிப் பிள்ளை எழுதிய கட்டுரை பாராட்டுப் பெறும் 10 கட்டுரைகளில் ஒன்றாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளது.

'நாட்டைக் கட்டி யெழுப்புதல் இங்கிருந்து யாம் எங்கு செல்கின்றோம்., என்ற தலைப்பில், 'ஆங்கில மொழி மூலக் கல்வியினை மீண்டும் எமது நாட்டில் அறிமுகப் படுத்துவதன் மூலமே எமது நாட்டின் ஐக்கியத்தைக் கட்டி யெழுப்ப முடியும் என்ற வாதமே இக் கட்டுரையில் காணப்படுகிறது.

வட மாகாணத்திலிருந்து சென்ற கட்டுரைகளில் தெரிவு செய்யப்பட்ட கட்டுரை இது ஒன்றே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## அணி வகுப்பு மரியாதை

யாழ்மாவட்டத்திற்கு முதற் தடவையாக விஜயம் செய்த பிரித்தானிய தூதுவர் திரு டேவிற் கிளஸ்டலும் அவரது துணைவியாரும்யாழ்மாவட்ட திரிசாரணர்குழு (நல்லூர்) பிரிவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட சாரணர் அணி வகுப்பு மாரியாதை வைபவம் யாழ் ஆங்கில அக்கடமியில் சான்றிதழ்வழங்கும் வைபவத்தில்நடைபெற்றது. அணிவகுப்புமாரியதை பற்றி தூதுவரும் துணைவியாரும் பராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

இந்தஅணிவகுப்புமரியாதை திரிசாரணர் தலைவர் ஆர். ஆர்.ராஜ்குமார் நிர்வாகச் செயலாளர் எஸ்,தேவறஞ்சன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

உதவிசாரணமாவட்டஆணையாளர்(பயிற்சி) திரு.என்.நல்லையா சிறப்பாளராகக்கலந்து கொண்டார். அணிவகுப்பில் யாழ் இந்துக்கல்லூரி சாரணர்களும் நல்லூர் செங்குந்தா இந்துக்கல்லூரி சாரணர்களும் கலந்துகொண்டு பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் பெற்றனர்.

## லேசர் ஒளி லேசுப்...

டறிந்துள்ளனர். ஒலி அலையை விட, ஒளி அலை தான் வேகம் மிக்கது.

எனவே மின்னல் வேகத்தில் இவை துல்லியமாக இயங்கும். அதோடு இதில் 'கிராஸ்டாக்' என்ற குறுக்குப் பேச்சுக்கு வாய்ப்பே இருக்காது!

வருங்காலத்தில் லேசர்ஒளிக் கற்றை என்னவெல்லாம் செய்யப் போகிறது என்பதை யாராலும் ஊகிக்க முடியாது.

காரணம், இது எல்லாத் துறைகளிலும் பயன்படச் சகல கலா வல்லவனாக இருப்பதுதான்.

(நன்றி (DO KUIAM)

# இரண்டு வருடங்களின் பின்னர் சென்.மேரிஸ் - நீக்கிலஸ் மோதல்

(விளையாட்டுத்துறை நிருபர்)

யாழ் உதைபந்தாட்ட லீக்கினால், அப்போதிக்கரி கிண்ணத்திற்காக நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் கடந்த 30ம் திகதிநடைபெற்ற போட்டியில் சென். நீக்கிலஸ் அணி ஒன்றுக்குப் பூச்சியம் என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இடைவெளிக்குப் பின் சென் நீக்கிலஸ் அணிக்கு அபூர்வமாகக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வீரன் பீ. ஆர். ஆனந்தநாயகம் கொடுத்த பந்தை வீரன் வி. சந்திரன் பெற்று ஒரு கோலைப் போட்டு சென். நீக்கிலஸ் அணியின் வெற்றிக்கு வழி வகுத்தார். சென். நீக்கிலஸ் கோல் காப்பு வீரன் எஸ். அலோசியஸ் ஜெயக்கொடி பல கஷ்டமான பந்துகளை வெகு திறம்பட தடுத்து ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றார்.

1988 ஆம் ஆண்டிற்குப் பின் இரு கழகங்களும் ஒன்றை ஒன்று எதிர்த்து ஆடுவதைத் தவிர்த்துவந்தன.

சென். அந்தனீஸ விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இப் போட்டிக்குக் கப்ரின் ட. ஏ. எம். குணசிங்கம், எஸ். பிறான்சிஸ் ஆகியோரின் உதவியுடன் ஏ. தேவா மத்தியஸ்தம் செய்தார். (16)

## விபத்தில் குடும்பஸ்தர் பலி

(வடமராட்சி)

துன்னாலையைச் சேர்ந்த செ. செல்வராசா (29) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தை விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மூத்தவிநாயகர் ஆலயத்திற்கருகாமையில் இவர் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் பயணிகளை ஏற்றி வந்த மினிவான் ஒன்று மோதியதில் படுகாயமடைந்த இவர் மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த போதே மரணமானார். இவர் துன்னாலைப் பகுதி சிற்றூரவைரயின் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. (44)

## சலாமின் நினைவாக

இந்தியப் படையின் சுற்றிவளைப்பின்போது நிகழ்ந்த நேரடிமோதலில் வீரமரணமடைந்த மேஜர் சலாமின் இரண்டாம் ஆண்டு நினைவையொட்டி சனிக்கிழமை மெய்வல் லுநர் போட்டியும் அஞ்சலிக் கூட்டமும் நடாத்தஏற்பாடாகியுள்ளது.

இமையாணன் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படும் மேற்படி வைபவம் இப்பகுதியிலுள்ள அன்னாரின் ஞாபகார்த்த மைதானத்தில் நடைபெறும். (44)

## மட்டக்களப்பு மாநகர பகுதியில்

# முத்திரையிடப்படாத இறைச்சி விற்பனை எனப் புகார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகரப் பகுதியில் விற்கப்படும் இறைச்சிக்குப் பொது சுகாதாரப் பகுதியினரால் முத்திரை இடப்படுவதில்லை எனப் பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இறைச்சிக்காக அறுக்கப் படும் ஒவ்வொரு கால்நடையும் கால்நடை வைத்திய உத்தியோகத்தராலும், பொது சுகாதாரப் பரிசோதகரினாலும் பரிசோதிக்கப்பட்டு இறைச்சி உண்ணத் தகுந்தது என சிபார்சு செய்து முத்திரையிடப் படவேண்டும்.

கடைசித் துண்டு இறைச்சி விற்குமளவிற்குக் கண்ணுக்குத் தெரியும் இடங்களில் இம் முத்திரை இடப்படல் வேண்டும். ஆனால் தற்போது விற்கப்படும் இறைச்சிகளில் இம் முத்திரைஇருப்பதாகத் தெரியவில்லை.

அதே வேளை இறைச்சி விற்பனையில் மாநகர சபையின் சட்ட திட்டங்கள் பின்பற்றப்படுவதாகத் தெரியவில்லையாம்!

அனுமதி பெறப்படாத இடங்களில் கால்நடைகள் வெட்டப்படுகின்றன. குடியிருப்புகள், அலுவலகங்களுக்கு அருகே கால்நடைகள் வெட்டப்பட்டு அனுமதி பெறப்படாத கடைகளில் வைத்து விற்கப்படுகின்றன.

சந்தையில் இறைச்சி விற்கும் கடைகளில் இறைச்சியை வெளியில் தொங்க வைத்து விற்பனை செய்கின்றனர். இறைச்சியில் ஈக்கள் மொய்ப்பதுடன் தூசிகளும் பட்டுக் கொண்டிருப்பதை அவதானிக்க முடியும். இதனால் இவ் விறைச்சி மூலம் நோய்க்கிருமிகள் மக்களுக்குத் தொற்ற வாய்ப்புண்டு.

இறைச்சியைக் கடைகளுக் குள்ளேயே வைத்து விற்க வேண்டும் என்பது சுகாதார நடைமுறையாகும்.

மேற்படி இறைச்சி விற்பனையில் நடைபெறும் சீர்கேடுகள் குறித்துப் பொது மக்கள் மாநகரசபை ஆணையாளருக்கும், பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் முறைப்பாடு செய்த போதிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காது இருப்பது குறித்துப் பொது மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (05)

## புலமைப் பரீட்சை

(கோப்பாய்)

பாடசாலை மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்கட்கு உதவிப் பணம் வழங்குவதற்குமான ஐந்தாம் ஆண்டு மாணவர்களின் புலமைப் பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் கல்வித் திணைக்களத்தினூடாக சகல பாடசாலைகட்கும் பரீட்சை ஆணையாளரினால் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

வழமை போன்று இவ்வருடமும், கணிதம், தமிழ் ஆகிய இரண்டு பாடங்களும் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சை ஆகஸ்ட்மாதம் பன்னிரண்டாம் திகதி நடைபெறும் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது. (23)

## நல்லூருக்கு மாற்றுமாறு கோரிக்கை

(நாயன்மார்கட்டு)

யாழ்ப்பாணம் மாநகர யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைக்குள் இருக்கும். உத்தரவு பெற்ற வர்த்தகர் சங்கத்தினர் பலர் தம்மை யாழ் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்திலிருந்து பிரித்து நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு மாற்றி விடுமாறு யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபரை மகஜர் மூலம் கோரியுள்ளனர்.

மேற்படி சங்கத்தினர் யாழ் உதவி அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள அந்த வேண்டுகோளில் யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைவிட நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பொருட்கள் கொள்வனவு செய்வது நமக்கு இலாபமாக இருப்பதாக சுட்டிக் காட்டியுள்ளனர்.

யாழ் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் கொள்வனவு விலைகளில் மாற்றம் இருப்பதாகவும் இந்த நிலையில் பொது மக்களுக்கு தங்கள் பொருட்களை விற்பனை செய்ய முடியாத கஷ்டம் இருப்பதாகவும் மேற்படி உத்தரவு பெற்ற வர்த்தகர் சங்கத்தின் செயலாளர் திரு. பா.லிங்கநாதன் தெரிவித்தார்.(33)

## மட்டு. மாவட்டத்தில்

# இலவச மூக்குக் கண்ணாடி வழங்க நடவடிக்கை

மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவைகள் திணைக்களம் கண் பார்வை குறைந்த வசதியற்ற நூறு பேருக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடி வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்தகவலை மட்/சமூக சேவைகள் உதவிப் பணிப்பாளர் திரு. ஆர். தியாகராசா ''முரசொலிக்கு'' தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பத்து உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்தும் வசதியற்ற கண்பார்வை குறைந்த பத்து பேர் வீதம் தெரிவு செய்து அனுப்புமாறு உதவி அரசாங்க அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

கண்பார்வை குறைந்தவர்கள் மேற்படிமூக்குக்கண்ணாடி பெறுவதற்கான வைத்திய குறிப்பை பெறுவதற்கு மட்டக்களப்பு பொது வைத்திய சாலையில் கண்நோய் வைத்திய நிபுணர் இல்லாமையால் வைத்திய குறிப்பை பெறுவதற்கு றோட்டரிக் கழகத்தின் உதவியை சமூக சேவைகள் திணைக்களம் நாடியுள்ளதாக திரு. தியாகராசா தெரிவித்தார்.

றோட்டரிக் கழகம் கண் வைத்திய நிபுணரை வாழைச்சேனை, கலுவாஞ்சிக்குடி, காத்தான்குடி ஆகிய இடங்களிலுள்ள வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்கு ஒரு நாள் சேவைக்கு அமர்த்துமாறு கேட்டுள்ளதாக சமூக சேவைகள் திணைக்கள உவிதப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (05)

## படகு இயந்திரம் திருத்துதல்

# மருதங்கேணியில் ஜூன் 2-ல் பயிற்சி நெறி ஆரம்பம்

மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் எதிர் வரும் 2-ம் திகதி காலை 9 மணிக்கு முறைசாராக்கல்வித் திட்டத்தின் கீழ் ''படகு இயந்திரம் திருத்துதல்'' என்னும் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சித் திட்டத்தில் 30 மாணவர்கள் பயிற்சி பெறத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இப்பயிற்சிநெறி பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கத்தால் ஆரம்பித்து வைக்கப்படுமென்வும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் கல்வி அதிகாரி முறைசாராக்கல்வி (தொழில் நுட்பம்) ச, சுப்பிரமணியம் வெளிக்கள உத்தியோகத்தர் த.பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொள்வர்

எமது பாரம்பரியம் காக்கப்படவேண்டும்

# திருமலை - உயர்ந்தபாடு மீனவர்கள் உரிமைக்குரல்

பாரம்பரிய ரீதியாகத் தமக்குள்ள மீன்பிடி உரிமையை திருகோணமலை - உயர்ந்தபாடு பிரதேச மீனவர்கள் நினைவுபடுத்தியுள்ளனர்.

திருகோணமலை பிரடரிக் கோட்டைப் பகுதியை அண்மியதான உயர்ந்தபாடு கடற்கரைப் பிரதேசத்தில் தாம் மீண்டும் மீன்பிடிப்பதற்கான வசதிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என உயர்ந்தபாடு கரைவலை மீனவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்,

பாரம்பரிய ரீதியாக இக்கடல் பிரதேசத்தில் கரைவலை மீன்பிடியினை மேற்கொண்டிருந்த மீனவர்கள் கடந்தகால வன்செயல் சம்பவங்களைத் தொடர்ந்து இப்பிரதேசத்தில் தொழில் செய்ய முடியாத நிலை தோன்றியிருந்தது.

இந்நிலைமாற்றப்பட்டு நமது உரிமை நிலை நாட்டப்பட வேண்டும் என்பதே இம் மீனவர்களின் கோரிக்கை என்று தெரிவிக்கப்படுகின்றது.

## மீன்பிடி தொழில்நுட்ப விருத்திக்கு முறைசாரா கல்விப்பிரிவின் பயிற்சி

கடற்றொழில் துறையில் நவீன தொழில் நுட்ப முறைகளை மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் மீன்பிடித் துறையில் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும் இதற்காகவே யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப்பிரிவு காங்கேசன்துறையில் மீன்பிடித் தொழில் நுட்ப மோட்டார் இணைப்பு பயிற்சி நெறியை ஆரம்பிக்கவுள்ளது. இவ்வாறு முறைசாராக் கல்விப் பிரிவு போதனாசிரியர் திரு. க. அருளாநந்தன் நேற்று சேந்தான்குளம் பகுதிமீனவர்களுட.னா்ன பத்திரிகை பயிற்சி மாணவரின் சந்திப்பின்போது குறிப்பிட்டார்.

சேந்தான்குளம் கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பின் சங்கத்தில் இப்பகுதி மீனவர்களை சந்தித்து முறைசாராக் கல்விப் பிரிவின் பத்திரிகைப் பயிற்சி மாணவர்கள் கலந்துரையாடல் ஒன்றையும் ஏற்பாடு செய்திருந்தனர்.

## 3 மாதத்துக்குள்ளாகவே 'வேலையை' காட்டிவிட்டார்

பொலிஸ் சேவையில் சேர்ந்து மூன்று மாத காலத்திற்குள் 500 ரூபாவை லஞ்சமாகப் பெற்றதாகக் கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதவான் திரு. எஸ், என். டி. ஜெயசூரியா மூன்று வருட காலக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். நுவரெலியா பொலிஸில் கடமை புரிந்த டி. எல். ரேணுக பிரியதர்சன ஜெயவர்தன என்பவரே பிரஸ்தாப கான்ஸ்டபிள் ஆவார். அனுமதியற்ற வீடியோ படமாளிகை ஒன்றை முற்றுகையிட்டு கசெட்டுகளைக் கைப்பற்றி அவற்றை மீளளிக்க 500 ரூபா லஞ்சம் பெற்றாராம் இவர்.

### இரத்த..

திற்கு உண்டு."என்று கூறிய அவர் யுத்தம் ஒன்றை ஆரம்பிக்கும் அளவுக்கு நாங்கள் மூடத்தனமாக நடந்து கொள்ள மாட்டோம்." என்றும் கூறினார்.

''தங்களுடன் யுத்தம் புரிய எவரும் தயாராகினால் அதற்குப் பதிலடி கொடுக்கத் தாங்களும் தயார்,, என்றே விடுதலைப் புலிகள் தலைவர்களில் ஒருவரான அன்ரன் பாலசிங்கம் கூறியிருக்கிறார் என்றும் அமைச்சர் திரு.விஜேரத்ன விபரித்தார்.

''வடக்கு,கிழக்கு மாகாண சபையைக் கலைப்பது பற்றி எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் ஜனாதிபதி இது பற்றிக் தக்க தருணத்தில் தீர்மானம் எடுப்பார். அவரது தீர்மானத்துக்காகச் சகலரும் காத்திருப்பது அவசியமாகும்,, என்று சொன்னார்.

இந்திய வம்சாவளிப் பிரஜைகளை இந்தியாவுக்குத் திருப்பியனுப்புவது பற்றிய கேள்விக்கு இது இலங்கை இந்திய அரசுகளுக்கு இடையில் தீர்வு காணப்பட வேண்டிய ஒருவிஷயம் என்று அவர்பதில் சொன்னார்.

''அவர்கள் இலங்கையில் தங்கிவிடத் தீர்மானித்துள்ளனர் என்பது உண்மையானால் அது பற்றிக் குடிவரவுத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இலங்கைப் பிரஜாவுரிமை இல்லாத எவரும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் நிரந்தரமாகக் குடியேறுவதற்கு உரிமையில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

## 'சமூக விஞ்ஞான சுடர்' வெளியீட்டு வைபவம்

'சமூகவிஞ்ஞான சுடர்' வெளியீட்டு வைபவம் எதிர்வரும் 7ம்-திகதி வியாழக்கிழமை காலை 9மணிக்கு கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் திரு, நா சோதிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. கவிஞர் பொ. விவேக் வரவேற்புரை நிகழ்த்துவார் பேராசிரியர் கா. சிவத்தம்பி கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் திருமதி சித்திரலேகா மௌனகுரு ஜனாப் பா. சமொகைதீன் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

### புதிர்ப் ...

டம் இராமநாதன் கல்லூரியிலும், பண்டத்தரிப்பு கோட்டப் போட்டிகள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும், வடமராட்சிக் கோட்டப் போட்டிகள் பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியிலும், தீவுப்பகுதி கோட்டப் போட்டிகள் வேலணை சேர் வை. துரைச்சாமி மகாவித்தியாலயத்திலும் தென்மராட்சி கோட்டப் போட்டி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் ஏககாலத்தில் இடம்பெறும்.

இப் போட்டிகளில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

## தனியார் கல்வி நிறுவனங்கள் கவனத்துக்கு...

இதுவரை பதிவு செய்யாத யாழ் மாவட்டத்தின் வடமராட்சி, தென்மராட்சி வலிகாமம்,தீவகம் பகுதிகளில் உள்ள சகல தனியார் கல்வி நிறவனங்களும் பத்து மாணவர்களுக்கு மேற்பட்டவர்களைக் கொண்டு இயங்கும் பிரத்தியேக வகுப்புக்களும் 5ம் திகதிக்கு முன்னதாக கோண்டாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலமைக் காரியாலயத்தில் பதிவு செய்தல் வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தினமும் காலை 10 மணி தொடங்கி 12 மணிவரையும் மாலை 2. 30மணி தொடங்கி 4. 30 மணி வரையிலும் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும் தவறவோர் மீது ஒழுங்குநடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும்தெரிவிக்கப்படுகின்றது

## கலர் கசிப்பு

சர்பத் கடையில் நிறம் ஊட்டப்பட்ட கசிப்பு விற்பளைக்கு தயார் நிலையில் இருந்த போது கண்டுபிடிக்கப்பட்டது. வவுனியாவில் பிரபல பாடசாலை ஒன்றின் முன் சர்பத் கடையில் இந்த கசிப்பு நிறம் ஊட்டப்பட்டு கடையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தது. வவுனியா நகர ப்பாது காப்பு உத்தியோகத்தர் கள் இதைன கண்டுபிடித்துள்ளனர். (11)

### மந்திரி ..

வைத்திருக்க வேண்டியது அவசியம். கடந்த வருடம் கொத்மலையிலுள்ள பாடசாலைகளில் பாதுகாப்புப் படையினருக்குத் தமிழ் படிப்பித்து அவர்களைக் கொண்டு தமிழ் நாடகமும் நடித்துக் காட்டினேன், என்றும் அமைச்சர் சொன்னார்.

### வலிந்து ..

யரத்ன தெரிவித்தார்.

ஒரு கட்டத்தில் விடுதலைப்புலிகளின் செயற்பாடு குறித்து கருத்து வெளியிடுகையில் ''ஆயுதங்களைக் கைவிடாத வரை எதிர்பார்க்கின்ற குறிக்கோளை அடைவது சாத்தியமில்லை'' என்று அவர் சொன்னார்.

### 20 வீதமானோர்...

தமிழ் மக்கள் இந்தியாவுக்குச் சென்று விட்டனர். இந்திய கடவுச்சீட்டு வைத்திருப்போரின் எதிர்காலம் கேள்விக்குறியாகி உள்ளது. இது குறித்து நான் ஜனாதிபதியுடன் பேச்சுநடத்தி சுமுகமுடிவு காணப்பட்டுள்ளது.

இலங்கை,இந்திய அரசுகளும் இது குறித்து பேசித் தீர்வு காண முடியும்.'' என்றும் அமைச்சர் கூறினார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலிவுறுத்தினார்.

## ரூபா 28 கோடி ஹெரோயின் கடந்த வருடம் சிக்கியது

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்குக் கடத்திவரப்பட்ட 28 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் கடந்த வருடத்தில் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பொலிஸ் தலைமையக போதைவஸ்து தடுப்புப் பணியத்தின் வருடாந்த புள்ளிவிபர அறிக்கையில் இத்தகவல் வெவியிடப்பட்டுள்ளது, 1988ஆம் வருடத்தில் 18 கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டது. கடந்த வருடத்தில் இத்தொகை 28 கிலோவாக அதிகரித்தது. போதைப்பொருள் கடத்தல், விற்பனை பாவனை ஆகிய குற்றங்களுக்காக கடந்த வருடத்தில் 9 ஆயிரத்து 735 பேர் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர்.

## தீவிர கவனத்தில் புலிகள் விடுத்த கோரிக்கைகள்

'' வட, கிழக்கு மாகாண சபையைக் கலைத்துப் புதிய தேர்தல் நடத்துதல் ஆறாவது திருத்தச்சட்டத்தை நீக்குதல் ஆகிய இரு விடயங்களையும் ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாஸ தனது தீவிரகவனத்தில் எடுத்துள்ளார். இவை தொடர்பான தீர்மானம் வெகுவிரைவில் மேற்கொள்ளப் படும்''

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நீதியமச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்கள் தொடர்பாக அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''வட,கிழக்கு மாகாண சபை இயங்காததால் வட, கிழக்கில் ஒரு அரசியல் வெற்றிடம் உள்ளதாகவும்இதனால் மாகாணசபை கலைக்கப்பட்டு புதிய தேர்தல் நடத்த உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்'' என்றும் புலிகள் வலியுறுத்தினர். எனவும் அரசாங்கத்தின் இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பத்திரிகையாளர் மாநாடு

## கொழும்பில் புலிகள் தூதுக்குழுவினர் நடத்துவர்

தமிழீழ விடுதலைப்புலிகள் தூதுக்குழுவினர் கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றினையும் நடத்துவர் என்று நேற்றிரவு 'முரசொலி' க்கு கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது.

இம் மாநாட்டில் பல்வேறு விடயங்கள் பற்றியும் எடுத்துரைக்கப்படும் என்று தெரிய வருகிறது.

## புரட்சியில் கைதானோரை இலங்கை ஏற்றுக் கொள்ளலாம்

1988இல் மாலைதீவில் இடம் பெற்ற புரட்சியின் போது கைதான அறுபத் தெட்டுப் பேரையும் இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளலாம் என மாலைதீவு அரசு அறிவித்துள்ளது. இத்தகவலை பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த அறுபத் தெட்டுப் பேரையும் இலங்கை அரசு ஏற்றுக்கொண்டாலும் சட்டப்படி அவர்களுக்கு இலங்கை அரசு தண்டனை வழங்கும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## போதைவஸ்து கொழும்பு செல்கிறது எனத் தகவல்

வன்னியிலிருந்து போதைப் பொருட்.கள் கொழும்பிற்கு கடத்தப்படுவதாக இப்போது தகவல்கள் வெளியாகி வருகின்றன.

வன்னிக்கு எப்படி போதைப்பொருட்கள் வருகின்றது என்பது ஆராயப்பட்டபோது இந்தியாவிலிருந்து கடத்தல் பொருட்களுடன் மன்னார் ஊடாக வவுனியாவிற்குஇவை கொண்டு வரப்படுகின்றது எனத் தெரியவந்ததாம். (11)

## காலமானார்

ஆசிரியர் திலகம்

### ஆறுமுகம் கணபதிப்பிள்ளை

கரவெட்டி இளைப்பாறிய ஆசிரியர் திலகம் ஆறுமுகம் கணபதிப்பிள்ளை அவர்கள் 1990, 5. 31 ஆம் திகதி வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார். இவர் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் அன்புக்கணவரும், சிவகுருநாதன் (கூட்டுறவுப் பரிசோதகர்), சபாநாதன் (கணேசன் அரிசி ஆலை - உரிமையாளர், கரவெட்டி), கமலாம்பிகை பத்மநாதன், மங்கையர்க்கரசி கணபதிப்பிள்ளை, பாலாம்பிகை சிவராசா ஆகியோரின் அன்புத்தந்தையும் ஈஸ்வரி சிவகுருநாதன் (ஆசிரியை), யோகம் சபாநாதன், க. பத்மநாதன், கா. சி. கணபதிப்பிள்ளை, ம, சிவராச[illegible] (முரசொலி) ஆகியோரின் அன்பு மாமனாருமாவா[illegible] அன்னாரின் ஈமக்கிரியைகள் 1.6.1990 இன்று பிறப[illegible] 3-00 மணியளவில் அவரது வதிரி இல்லத்தில் ந[illegible] பெற்றுத் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை மயா[illegible] திற்கு எடுத்துச் செல்லப்படும், இவ்வறிவித்த[illegible] அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:
பிள்ளைகள்

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ், [பிறைவேட்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி [illegible] இலக்கத்திலுள்ள அச்சகப்பிரிவில் 01-06-1990ல் அச்சிட்டு வெளியிட[illegible]